தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 19-10-57 | சனிக்கிழமை | இதழ் 16

சீசா! சீசா!!

மருத்துவத் துறையில் புகழ் பெற்றவனை 'கைராசிக்காரர்' என்கிறார்கள். வணிகத்துறையில் பொருள் சேர்த்தவனை, 'சுக்கிர திசைக்காரன்' என்கிறார்கள். ஆனால் அரசியலில் காரணமில்லாமல் புகழ்பெற்றவர்களுக்கு உலகம் இதுவரைக்கும் எந்த 'ஐதீக'க் காரணத்தையும் சொல்லவில்லை. கண்ணியவான்களும், தன்னம்பிக்கை மிக்கவர்களும், உழைப்பால் உயர முடியும்' என்பார்கள். உண்மைதான்; உழைப்பு உயர்வைக் கொடுக்கலாம் தான்; ஆனால் உயர்வுபெற்றவர்களெல்லாம் உழைத்தவர்களா என்றால்—அது சந்தேகத்திற்குரியதுதான்.

உலக வரலாற்றில் அரசியல் துறையில் காரணமில்லாமல் முன்னுக்குக் கொண்டுவரப்பட்டவர்'- புகழப்பட்டவர் பண்டிதநேரு ஆவார். காங்கிரஸ் பேரியக்கம் ஆளுங்கட்சிக்கு எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் மாநாடுகளில் - கூட்டங்களில் - வரவேற்புகளில் - தன்னுடைய முகவிலாசத்தைக் காட்டிக்கொண்டு தத்துப்பிள்ளையைப்போல் காட்சியளித்து வந்தவர் நேரு. கொடி தூக்கி மகிழ்ந்த தொண்டர்களிலிருந்து கொடியேற்றிப் பூரித்த தலைவர்கள் வரை நேருவுக்குப் பிடிக்காதவர்களாகத்தான் இருந்தார்கள். நேருவை மீறிப் போனவர்களை காந்தியாரின் கிழட்டுக் கரங்கள் அமுத்திவைத்தன. அப்படி அமுத்தப்பட்டவர்களில், தோள் பட்டை காய்த்துப்போகும் அளவுக்கு அமுத்தப்பட்டவர் பட்டேலாவார். சொந்தக் கருத்துக்களை காந்தியாரின் தனிப்பட்ட விருப்பத்திற்காக விட்டுக்கொடுத்து அதன் பயனாய் பின்னுக்குத் தள்ளப்பட்டவர்களில் பட்டேல்தான் வடநாட்டில் மிக முக்கியமானவர். பட்டேலைக் காட்டிலும் மிகமிகக் குறைந்த அளவுக்கு வாக்குகள் பெற்ற நேருப் பண்டிதரை காங்கிரசின் தலைவராக்க காந்தியார் பட்டபாட்டை காங்கிரஸ் தொண்டர்கள் என்றென்றும் மறப்பதற்கில்லை.

இவ்வளவு எதிர்ப்புகளுக்கிடையே நேருப் பண்டிதரை காந்தியார் தூக்கிவிடக் காரணமென்ன? இதுவரை யாரும் சரியான விடை கண்டதாகத் தெரியவில்லை. ஆச்சாரியாருக்கே புரியவில்லை! அப்படியானால் அது பெரிய ரகசியமாகத்தானிருக்கும்! ஆனால் காந்தி - நேரு உறவு பற்றி காங்கிரசுக்குள்ளே குழப்பம் ஏற்பட்டுவிடக்கூடாது என்று எண்ணிய 'தும்பைப்பூ தேசீய வாதிகள்' இரவு பகலாக ஆராய்ந்து ஒரு புதிய காரணத்தைக் காட்டினார்கள். "வெள்ளைக்காரனை எதிர்ப்பதற்கு ஏழைகளால் மட்டும் முடியாது; பணக்காரர்களும் கட்சிக்கு வந்தால்தான், அந்தக் கட்சியின் கொள்கை எல்லோராலும் ஆதரிக்கப்படும் கொள்கை என்று வெள்ளையர்கள் கருதுவார்கள்-அதனால்தான் நேருஜிக்குக் காந்திஜி முக்கியத்துவம் கொடுத்தார்" என்று காங்கிரஸ்காரர்கள் பறையடிக்க ஆரம்பித்தார்கள். இதுதான் உண்மையென்று காங்கிரஸ்காரர்களே நம்பவில்லையென்கிற போது, மற்றவர்கள் எப்படி நம்புவார்கள். பட்டம் பெற்ற காங்கிரஸ்காரர்கள் பொது மக்கள் நம்பும்படி ஒரு காரணத்தைச் சொன்னார்கள். "காந்திஜி அவர்கள் கெண்டையைப் போட்டு விராலை இழுக்கிறார்" என்று சொல்லி அதற்கொரு சிறு விளக்கமும் கொடுத்தார்கள். "நேருஜி அவர்கள், வெள்ளைக்காரத்துரை மக்களோடு ஒன்றாக இருந்து பழகியவர்; சமமாக வாழ்ந்தவர்; ஆகவே வெள்ளையர்களுக்கு ஈடான அந்தஸ்துள்ள நேருவைக் காட்டி ஆங்கிலேயர்களுக்கும் இந்தியர்களுக்கும் உறவை ஏற்படுத்தி நாட்டுக்கு விடுதலை வாங்க நினைத்தார் காந்திஜி." என்கிறார்கள். இன்று, வெள்ளையர்கள் சுதந்திரம் தந்ததும் நேருவின் நட்பு அடிப்படையில்தான் என்று கூறும் காங்கிரஸ்காரர்கள் இல்லாமலில்லை.

இவ்வாறு பல காரணங்களைக் காங்கிரஸ்காரர்களே கிளப்பிவிட்டதுண்டு. இந்தக் காரணங்கள், காந்தியார் ஏன் நேருவை மதித்தார் என்பதற்கானவைகளாகும். ஆனால் நேரு இன்று புகழப்படுவதற்கு என்ன காரணங்கள் என்று இதுநாள் வரை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

நேருவிடம், எதையும் துணிவோடு செய்துமுடிக்கும் ஆற்றல் இருக்கிறதா என்றால் இல்லை என்று உடனே கூறிவிடலாம். இந்திய சர்க்காரின் வெளிநாட்டுக் கொள்கை இதுவரை எதுவும் கணிசமான அளவுகூட வெற்றி பெறவில்லை. அமெரிக்கா வரவேற்கிறது; உண்மைதான். அதே அமெரிக்கா பண்டிதரைத் திருப்பி அனுப்பியவுடன் பாகிஸ்தானுடன் ராணுவ ஒப்பந்தம் செய்துகொள்கிறது.

ரஷ்யாவிலும் அப்படித்தான்! இம்மி அளவுகூட ரஷ்ய சர்க்கார் நேருவிடம் மனம் திறந்து பேசவில்லை. இமயமலைக்கு வடக்கே இருக்கும் திபேத்திற்குள் ரஷ்யாவின் தூண்டுதலின் பேரில் கம்யூனிஸ்ட் சீனப்படை நுழைந்தது. நேருப் பண்டிதரின் எந்தத் துணிவும் ரஷ்யாவின் அபிமானத்தைப் பெற முடியவில்லை. திபேத்திற்குள் சீனப் படை நுழைந்தது இந்தியாவுக்குப் பெருத்த அவமானமும்,

— 10-ம் பக்கம் —

கனகம் என் காதலி

பி. எஸ். மணியன், பி.ஏ

வட்டநிலா எட்டிப் பார்க்கும் வானத்தையே பார்த்துக்கொண்டிருந்தான் பாலகுரு. உதைத்துவிட்ட பந்துபோல உருண்டநெஞ்சு எண்ணத் தடங்களைப் பதித்தவாறு சென்றது. விரிந்து கிடக்கும் புத்தகக் குவியல்கள் அவனைக் கல்லூரி மாணவன் என்றன. அவனது மனம் சிந்தனைக் கயிறுகொண்டு நிகழ்ச்சிப் பட்டங்களைப் பறக்க விடுவது வாடிக்கை.

கலைந்து கிடக்கும் கூந்தல்,கற்பனை வெளியிலே வட்டமிடும் கண்கள், கட்டுருவைப் போர்த்தியிருக்கும் ஜிப்பா-நாகரிக வாலிப எழுத்தாளனின் அத்தனை அம்சங்களும் சேர்ந்து சமைத்த உருவமே பாலகுரு. அலைந்து திரியும் நிலா-அணைக்கத் துடிக்கும் மேகம்-இவையெல்லாம் எதற்காக, ஏன் என்ற கேள்விகளை எழுப்பி எழுப்பி, பதிலைத் தேடிப் பறந்தான் பாலகுரு. எத்தனை பங்களாக்களையும் பாழும் குடிசைகளையும் காதல் பிணைத்து வைத்திருக்கிறது. செல்வக்கரங்களின் ஏகாதிபத்தியப் பயமுறுத்தலையெல்லாம் பணியவைத்திருக்கிறது காதல். இத்தகைய காதல் தன் வாழ்விலும் தோன்றித் துயர்துடைக்காதா...? என்று எழுத ஆரம்பித்தானே அன்றே இக்கேள்வியைக் கேட்டுத்தான் தனது எழுத்துப் பயணத்தைத் துவக்கினான் பாலகுரு. அன்றுமுதல் அவன் பேனாவிலே இருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையிலும் கரும்பின் சுவை தோன்றும், இரும்பு இதயங்களையும் இளக வைக்கும் இன்பம் கூத்தாடும். காதல் துள்ளும், நெஞ்சங்களை வெல்லும்...யங்கள முடிவைத் தனது கதாநாயர்களுக்குக் கிட்டவைத்து மகிழ்ச்சிப் பூப்பறித்து மகிழ்வான் பாலகுரு.

பொம்மை செய்யும் தொழிலாளியால் பொம்மையை வைத்து விளையாட முடிவதில்லை. அதுபோல, காதல் கதைகளை உருவாக்கும் என்னால் காதல் செய்ய முடிவதில்லையே ஏன் ?—இந்த எண்ணம் மதிலிலே அடித்த ஆணியாக மனதைக் குடைந்தது. எத்தனையெத்தனை அனார்கலிகளை, அமராவதிகளை, பார்வதிகளை உருவாக்கினேன் நான். எங்கே எனக்கொரு அனார்கலி, ஒரு அமராவதி, ஒரு பார்வதி? ஆடிக்காற்றிலகப்பட்ட இலவம் பஞ்சாக பாலகுருவின் இதயம் அலைமோதித் திரிந்தது. இருண்டுகிடந்த நெஞ்சவானத்திலே நம்பிக்கை நட்சத்திரமாகத்தான் அன்று வந்த அக்கடிதத்தை அவன் கருதினான். உதட்டிலே புன்னகை, உள்ளத்திலே புதுமை, உலகத்தைப் பார்த்து அவன் விடுத்த சவால் சிரிப்பு-இத்தனைக்கும் காரணம் அவனைக் காதலனாக்கிவிட்ட அந்தக் கடிதக் கொத்து !

குழந்தையின் கையிலே விளையாட்டுப் பொருள் கிடைத்தால் அதை என்ன பாடு படுத்துகிறது. அதே மாதிரி அவன் கரத்திலே சிக்கிய அந்தக் கடிதமும் தவித்தது. கசங்கிப் போகும்வரை அந்தக் கடிதத்தைத் திரும்பத் திரும்ப வாசித்தான். நெஞ்சு பொங்கி வடித்த ஆனந்தக்கண்ணீர் கடிதத்தின் எழுத்துக்களைக் களைந்தெரியும் வரை படித்தான். தெரியாமலா காதலனைக் குழந்தைக்கு ஒப்பிட்டார்கள் மாபெரும் கவிஞர்களெல்லாம் ! இதே கருத்தை எத்தனை கதைகளிலே மையமாக்கி எழுதியிருக்கிறான் பாலகுரு! இருந்தாலும் தன் சொந்த வாழ்விலே இத்தகைய காதல் விளையாட்டுக் காட்ட ஆரம்பித்தவுடன்,எங்கிருந்தோ வெட்கம் ஓடிவந்து அவனைக் கவ்விக்கொண்டதே...உலகப் பெருங் காவியங்களிலெல்லாம் ஒளிந்து நின்று தெளிவு காட்டும் அத்தனை நயமும் காதல் கடிதத்தின் ஒரு வார்த்தைக்கு ஈடாகுமா ? கற்பனை ஊஞ்சலிலே ஆடினான், தனக்குக் கடிதமெழுதியவள் எங்கே எங்கே என்று தேடினான்.

'அன்பரே,

தங்களுக்கு அறிமுகமில்லாத ஒரு பெண்ணின் கடிதமென நீங்கள் நினைப்பீர்கள். நேரடியாகப் பழக்கமில்லையென்றாலும், என் நெஞ்சு உங்கள் எழுத்தோடு நீண்டநாட்களாகத் தொடர்பு கொண்டிருக்கிறது. "இதயம்" என்ற பத்திரிகையை மணக்க வைக்கும் தங்கள் கதைகளைத் தவருது படித்துவரும் ரசிகை நான். அந்தக் கதைகளின் நயத்திலே, நீங்கள் வார்த்தைகளைக் கையாண்டு நெஞ்ச நினைவுகளை அப்படியே படம் பிடித்துக்காட்டும் பக்குவத்திலே, நான் எத்தனையோ முறை மெய்மறந்து கிடந்திருக்கிறேன். உங்கள் எழுத்து ஒரு பாசத்தொட்டில். அங்கே மழலை கொஞ்சுகிறது, மையல் மிஞ்சுகிறது. சுருக்கமாகச் சொன்னால் எழுத்து வலையால் என் மனதை இழுத்து வைத்துக்கொண்டீர்கள். காதல் காதல் எனச் சுற்றித் திரிந்த நான், உங்களின் எழுத்துகாட்டிய பாதையிலே சென்றேன். அங்கே போதைச் சிரிப்பைச் சிந்தியவாறு நிற்கும் தங்கள் உருவைக் கற்பனைக் கண்களால் கண்டேன். என் வாழ்க்கைக் கொடியைப் படர வைக்கும் வகையான மரம் நீங்கள்-இந்த முடிவுக்கு வந்தது முதல் தங்களைக் காணத் துடிக்கிறேன். தஞ்சாவூர் தங்களது சொந்த ஊர் என்பதையும், முகவரியையும் பத்திரிகை அலுவலகத்திலே தெரிந்துகொண்டேன். எழுத்திலே கண்ட உங்கள் உருவை, எண்ணத்திலே பதித்துக்கொண்ட கற்பனை உருவை, எதிரிலே என்று காணப்போகிறேனோ...எனது கல்லூரி விடுமுறையில் தஞ்சையிலுள்ள அத்தையின் வீட்டுக்கு வருவேன். அப்போது சிந்தனையைச் சிறக்கவைக்கும் தங்களைச் சந்திக்கிறேன். உங்கள் உள்ளம் எனக்கே சொந்தம் என்பதோடு முடிக்கிறேன்.

உங்களின்
கனகம்.'

கனகம் அன்றுமுதல் கதைகளின் கதாநாயகியானாள். பாலகுருவின் நெஞ்சத்தைக் குடைந்து குடைந்து, கற்பனையில் குளுகாலத்தைக் கொட்டிக்குவித்தாள் கனகம். பக்தர்கள் ஆண்டவனின் பெயரை அர்ச்சிப்பதுபோல, பாலகுரு கனகத்தின் பெயரைச் சொல்லிச் சொல்லி நாவிலே நயமேற்றிக் கொண்டான். பக்தன் உலகத்துக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒன்றைப் பூஜிக்கிறான். உலகத்துக்கே உணர்வைத் தரும் காதலியின் பெயரை கல்வெட்டுக்களிலே செதுக்கி நான் ஏன் பூஜிக்கக்கூடாது? எழுத்தாள இதயம் எதற்கும் காரணம் கற்பிக்காமலா இருக்கும்...! மண்ணை அள்ளி உடம்பிலே போட்டு விளையாடுவதிலே தானே, குழந்தை மகிழ்ச்சி கொள்ளுகிறது. காதலைக் குடியேற்றி, அதன் அலைக்கழிவுகளிலே சிக்கிச் சிதைவதை எவ்வளவு ஆவலுடன் வாலிப உள்ளம் வரவேற்கிறது...! பாலகுருவின் நெஞ்சிலே பீறிட்டுப் பொங்கும் பூரிப்பு,அவனது நடத்தைகளிலெல்லாம் கோலமிட்டது. நெருங்கிப் பழகும் நண்பர்களுக்குக்கூட விடுவிக்கமுடியாத புதிராகக் காட்சி தந்தது பாலகுருவின் புதுமை நடத்தைகள். பாண்டியன், பாலகுருவின் நெருங்கிய நண்பன். பாண்டியன் துருவித்துருவி நண்பனின் இதயத்தின் புதிய பூரிப்பு பற்றி விசாரித்தும், எவ்விதப் பதிலையும் பெறமுடியவில்லை. காதல் மறைத்து வைக்கமுடியாத ரகசியம். எந்தக் காதலனும் தனது காதல் சங்கதியை யாராவது ஒருவரிடம் சொல்லாமலிருப்பதில்லை. ஆனால் பாலகுரு தன் காதல் ரகசியத்தை, இரும்புக் கோட்டைக்குள் அடைத்து ரகசியமாக்கிக்கொண்டான். எந்த அளவுக்கு வார்த்தைகளை வரையறையின்றி எழுத்துக்களாகக் கொட்ட முடிகிறதோ,அந்த அளவுக்கு நெஞ்சத்திலே பெருகிய ரகசியத்தைக் கசிவாக்காமல் காத்துக்கொள்ளவும் எழுத்தாளனால் முடிகிறது. தன்னுடைய பாதுகாப்புத் திறமையை நினைத்துத் தனக்குள்ளாகவே சிரித்துக்கொண்டான் பாலகுரு.

"தங்கக்கிளியே உன்னைத் தாங்கித் தயவுபெற என் நெஞ்சம் துடிக்கிறது. தாவிப் பறந்து வந்து தவிக்கும் எனக்கு, வாழ்வு அளிக்கத் தவருதே"-இப்படியாக அவன் பதில் பறந்தது. தென்றலின் அசைவுபட்டுக் கொடி ஆடும்-அப்போதெல்லாம் கனகத்தின் பட்டுஉடல் ஆடுவதுபோல அவனுக்குத் தெரியும். காதல் மொத்தத்தில் அவனைப் பைத்தியக்காரனாக்கியது. அதனால் தானே அவன் கற்பனையென்ற மெல்லிய நூலிலே தன் எதிர்காலத்தைக் கட்ட நினைக்கிறான். காதலுக்கும் கற்பனைக்கும் எத்தனை பொருத்தம்...!

கால மலரின் நாட்கள் உதிர்ந்துகொண்டே சென்றன. அவன் உள்ளம் மட்டும் உல்லாசத்திலே மிதந்துகொண்டே கிடந்தது. கனகம் என்ற சொல் இருக்கும்வரை பாலகுருவின் பறக்கும் மனதைக் கட்டிப்போட யாரால் முடியும்...!

— 11ம் பக்கம் —

தென்றல்

9-11-57 இதழிலிருந்து

மா. கி. தசரதன், எம். ஏ.

தரும்

அத்திப் பழம்

அற்புதக் தொடர்கதை

ஆரம்பமாகிறது!

எண்ணம்

கண்ணதாசன்

மலர் 4 ‖ 19—10—57 ‖ இதழ் 16

கொண்டு வந்தாரே குமுறுகின்றாரே !

நாம்சொலின் வகுப்பு வாதம்
    நல்லதோர் ஒற்று மைக்கே
தீம்புசெய் பேத எண்ணம்
    தில்லியின் காது கேட்க,
தாம்பரம் பேச்சில், வீரர்
    சக்கர வர்த்தியாரே
மாம்பழம் வகிர்ந்தாற் போல
    வடித்ததை என்னென் பார்கள் ?

உரத்ததோர் குரலிற் சொன்னார் !
    "ஒற்றுமை இதுவா ?" என்றார்.
"திறத்திலே இந்திப் பாடை
    தேர்ந்ததா ? நாட்டோ ரெல்லாம்
சிரத்திலே சுமக்க இந்தி
    சிறந்ததா ? எவ்வா" றென்றார் !
"தரத்திலே உயர்ந்து வாழும்
    தமிழர்கள் சகியா" ரென்றார் !

"ஆங்கிலம் நமக்குந் தந்த
    அருமைகள் பலவாம் ;" என்றார்
ஆங்கிலம் வேண்டா மென்றே
    அவ்விடத் திந்தி வாழ(த்)
தாங்குவார் அறிதல் வேண்டும்
    சக்கர வர்த்தி மைந்தர்
ஆங்கிலர் அடியா ரல்லர்
    அனைவரிற் சிறந்த தியாகி !

அறிவிலே பெரியார்; "மக்கள்
    அன்பைநான் மதிப்ப தாலே
உருவிலே ஒழுங்கில் லாத
    ஓர்மொழி புகுதல் வேண்டேன் !
உறவெனில் சரிதான் ! இல்லை
    உண்பதே கடமை என்பார்
அறிவிலார் !" என்றார்; ஈதை
    அறிகிலார் அறிவி லாரே !

படித்திட உரைத்தார் முன்பு !
    பகுத்தறி வியக்கத் தாரை
அடைத்தனர் சிறையில்; இன்றோ
    ஆங்கிலம் போதும்; இந்தி
கெடுத்திடும் நம்மை என்றார் !
    கேட்டவர் கைகள் கொட்டி,
வடித்ததோர் வார்த்தைக் காக
    வாழ்த்தினர் அவரை ! வாழ்க !

சென்னைமா நிலத்தை ஆளும்
    சில்லறைத் தமிழர் ! தங்கள்
முன்னவன் மூத்தோன் சொல்லை
    முனிவிலா தெண்ணல் வேண்டும் !
சொன்னவர் அமைச்சர் தங்கள்
    துணைவரே ! மாற்றார் அல்லர் !
அன்னவர் பேச்சில் என்றும்
    அனுபவக் கருவே நிற்கும் !

இதனையும் எண்ணா ராயின்
    இடுப்பொடி படுவார் ! தங்கள்
உதவியும் இழப்பார் ! மக்கள்
    உதைப்பதும் படுவார் ! அன்னார்
பதவியும் பட்டம் போலே
    பறந்திடும் ! குமுறும் மக்கள்
நதியென எழுந்தா ராயின்
    நாய்க்குலம் உயிர்கா வாது !

★

— 4ம் பக்கத் தொடர்ச்சி—

ஆரிய வருண மரபில் அவர்கள் கடைப்படிக்கும் கீழ்ப்பட்டவர்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கி. மு. 4-ம் நூற்றுண்டில் வட திசையில் வாழ்ந்ததாகக் கூறப்படும் தென்னகப் பார்ப்பன அறிஞராகிய சாணக்கியர், தம் காலத்தில் விலையேறிய ஏற்றுமதி வாணிகத்துக்கும் செல்வநிலைக்கும் தென்னாடு பேர் போனது என்பதையும், வடதிசை வாணிகம் அத்தகு சிறப்பு ஒரு சிறிதும் அற்றதாக இருந்தது என்பதையும்சுட்டிக் காட்டுகிறார். 14-ம் நூற்றுண்டில் தென்னகம் வந்த வெளிநாட்டு யாத்திரிகரான மார்க்கோபோலோவும் இபன்பதூதாவும் இதே நிலை அணிமைக் காலத்திலும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றனர். செல்வ வளமும் அரசியலாற்றலும் மிகுந்த தென்னகத்தைப் பெரிய இந்தியா என்றும், அது குன்றிய வடதிசையைச் 'சிறுமை இந்தியா' என்றும் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியுள்ளனர்.

விசயநகரப் பேரரசர் நீங்கலாகத் தென்னக அரசர்,பேரரசர் யாவருக்கும் இருந்த கடற்படை வடதிசை அரசர்கள், பேரரசர்கள்-அசோகன் முதல் அவுரங்கசீப் வரை அறியாத ஒன்று. உண்மையில் வடதிசைப் பரப்பு நில எல்லையில்கூட வீர மரபு பேணாது, நடு ஆசியாவின் பண்படாக்குடியெழுச்சிக்காரர்தம் படையெழுச்சிகளுக்கும் வாயில் திறந்து வைத்துத் தான் கெட்டதுடன் நில்லாது தென்னகத்தின் வீரமரபிலும் கடல் மரபிலும் சமயப் போர்வையில் புகுந்ததன் பயனாகவே கடைசித் தென்னகப் பேரரசரான விசயநகரப் பேரரசரும் 16-17-ம் நூற்றுண்டுத் தென்னகமும் பழைய வீர மரபும் கடல் மரபும் பெரிதளவு மறந்து மறைந்து வெள்ளையர் கடல் வழி வரவுக்கு இடந்தர நேர்ந்தது என்னலாம். தென்னகத் தேசியத்தில் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் இம்மரபு புதுப்பிக்க எண்ணியும் வடதிசைப் போலித் தேசியம் அவர் பண்பையும் மறைத்துப் பெயரையும் இருட்டடித்து வருவது தமிழர்களனைவரும் அறிந்ததேயாகும்.

'திராவிடநாடு எது, எங்கே' என்ற கேள்வி இவ்வாறாக ஒரு புதிய தேசியம்பற்றிய பழய தேசியத்தின் கேள்வியல்ல. ஒரு பழம் பெரும் தேசியம்பற்றிய ஒரு புதிய, இன்னும் உருவாகாத, என்றும் உருவாக முடியாத ஒரு போலித் தேசியத்தின் கேள்வியேயாகும். கேள்வி கேட்பவர் உள்ளத்தில் நிழலுருவாக ஊசலாடும் போலி ஒற்றுமைக் குறிக்கோள், போலித் தேசியக் குறிக்கோள்கூடத் திராவிட நாட்டின் ஒற்றுமையின் ஒரு விரிந்த நிழலேயன்றி வேறன்று; இன்று இந்தியாவில் காணப்படும் பரந்த ஒற்றுமைபோன்றதே. அது ஐரோப்பாவின் ஒற்றுமையைவிட மிகக் குறைந்ததே என்று சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரி போன்ற அறிஞர் சுட்டிக் காட்டியுள்ளனர். ஐரோப்பாவில் காணப்படும் நாகரிக ஒற்றுமையை நாம் முனைப்பாக மேற்கிலும் தெற்கிலும் காண்கிறோம். வரலாற்றில் அது தென் கிழக்கிலிருந்து தென்மேற்கு, மேற்கு,வடமேற்காகவலஞ்சுழித்துச் செல்கின்றது, மற்றத் திசைகளில் பரவுகின்றது. அதுபோல ஒரு கண்டம், ஒரு குட்டி உலகம் என்ற அளவில்கூட இந்தியாவில் (இந்தியக் கூட்டுறவு, பாகிஸ்தான் உட்பட்ட பரப்பில்) காணப்படும் ஒற்றுமை, தெற்கிலும் கிழக்கிலுமேகாணப்படுவதாகும். அது வரலாற்றில் தெற்கிலிருந்து தென்கிழக்கு, கிழக்கு, வடகிழக்காக இடஞ் சுழித்துச் செல்வது என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே பாரத கண்டத்தின் ஒற்றுமை என்பது, உண்மையில் அதில் ஒழுங்கான தேசியக் கட்டமைப்புடைய உயிர்ப் பகுதியான திராவிட நாட்டின் ஒற்றுமை, திராவிட நாடு கடந்த திராவிடப் பண்பாட்டின் விரிவெல்லை ஆகியவையேயன்றி வேறன்று.

திராவிட நாட்டின் தனிப் பேரினமான திராவிட இனமே, இந்தியத் துணைக் கண்டத்தின் அடிப்படை இனம் என்பதை இந்தியக் கூட்டுறவரசு வெளியிட்டுள்ள இனவாரிப் படமே தெளிவாகக் காட்டும்.விந்தியம் வரையுள்ளதென்னகப் பரப்புத் தூய திராவிட இனமாகவும், பஞ்சாப், இமயமலையடிவாரம் தவிர மீந்த பகுதிகள் பல்வேறினங்களுடன் கலந்த திராவிடஇனமாகவுமே அதில் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது திராவிட இனத்தின் தேசியப் பரப்பல்ல. அதன் உலகளாவிய நாகரிகப் பரப்பின் ஒரு பகுதியே. ஏனெனில் இன வரலாற்று அறிஞர், பண்பாட்டு வரலாற்று அறிஞர் கூற்றுப்படி, தென்கிழக்காசியா தென் ஆசியா, மேலை ஆசியா, தென் ஐரோப்பா, வட ஆபிரிக்கா நடு அமெரிக்கா ஆகிய பெரும் பரப்புக்களின் இன, நாகரிக அடிப்படைப் பண்பாடே திராவிட நாகரிகத்துடன் தொடர்புடையதுஎன்று கூற இடமுண்டு.

திராவிடம் தேசிய இனமா என்று வடவரும் வடவர் பக்தரும்கேட்கும் கேள்வி இவ்வாறு அவர்களுக்குத் தான் ஆபத்தான கேள்வியாக முடிகிறது. ஏனெனில் அதன் விடை திராவிடம் தேசிய இனம் என்பது மட்டுமன்று, **திராவிடம்தான் பண்டை உலகின் ஒரே தேசிய இனம்** என்பது. **பாரதமோ பண்டைஉலகிலும்தேசிய இனமன்று, இன்றைய உலகிலும் ஒருதேசிய இனமன்று.** ஒரு தேசிய இனமாகவோ, தேசிய இனக் கூட்டுறவாகவோகூட அது வருங் காலத்தில் உருவாகும் வாய்ப்புடையதன்று. ஏனெனில் அத்தகைய தேசிய இனக் கூட்டுறவைக் குடியாட்சிப் பண்புஅளாவியஒரு உயிர்த் தேசிய இனமே வளர்த்து உருவாக்கமுடியும். திராவிட இனத் தேசியம் அத்தகைய குடியாட்சிப்பண்புடைய உயிர்த் தேசியம். அதன் வழி நின்றால் தென் கிழக்காசியாவே, ஆசியாவே ஒரு உயிர்த்தேசியக் கூட்டுறவாக வளம் பெறமுடியும். வடதிசைப் போலித் தேசியமோ உருவாகாத் தேசியங்களை அடக்கியாள நினைக்கும் ஒரு செயற்கை ஏகாதிபத்தியம்-வெள்ளை ஏகாதிபத்தியம் உருவாக்கி இயங்கவிட்டுச் சென்ற குட்டி ஏகாதிபத்தியம். அதனால் உயிர்த் தேசியமாக இயங்கவும் முடியாது; உருவாகாத் தேசியங்களை உருவாக்கும் திராவிடப் பண்பாற்றலும் அதற்குக் கிடையாது. ★

- தொடரும் -

இராயப்பேட்டை தி. மு. க.

ஏழாம் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் 23 - 10 - 57 புதன் மாலை 6 மணிக்கு சீனிவாசபுரம் 2வது தெருவில்.

தலைவர்: **டி. என். கிருட்டினன்**

பேசுவோர் :

கலைஞர் மு. கருணாநிதி
கண்ணதாசன்

இன்னிசை :

டேப் இராதாமாணிக்கம்

இதுதான் திராவிடநாடு



பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் எம்.ஏ., எல்.டி

- 4 -

திராவிடம் ஒரு தனி இனம், தனி நாகரிகம் வாய்ந்த தனி நிறை தேசியம். பாரதம் என்றுகூறப்படும் இந்தியாவோ, அதில் குறைபட்ட இன்றைய இந்தியக் கூட்டுறவோ தனித் தேசியமன்று என்பதுமட்டு மல்ல; தனித் தேசியங்களின் ஒரு கூட்டுறவுகூட அல்ல. திராவிடம் போன்ற ஒரு சில தனித் தேசியங் களையும் தேசியமாக உருவாகாத பெயரில்லாப் பரப்புகளையும் உள் ளடக்கிய ஒரு கதம்ப கூளம்!

திராவிடம் கீழ் திசையிலுள்ள பழம் பெரு வரலாற்றினங்களுள் ஒன்று, முக்கியமான, நடு நாயக மான ஒன்று. அது கீழ்திசைப் பேரினங்களின் உயிர் மையமான, அவற்றினிடையே மிகப் பழமையும் பெருமையும் வாய்ந்த மூல-முதல் தேசிய இனம். அதற்கு ஓர் உயிர் வரலாறு உண்டு. நாகரிகம், நாகரிக வளர்ச்சி உண்டு. அதில் இடப் பரப்பு வகையிலோ, இன வகை யிலோ, மொழி வகையிலோ உயர்வு தாழ்வுகள் கிடையாது. அதிலுள்ள இடவேறுபாடுகள். மொழி வேறு பாடுகள்கூட, ஒன்றை ஒன்று நிறைவுபடுத்தும் ஒரே பெருந் தேசி யத்தின் உறுப்பு வேறுபாடுகளே. இதற்கு நேர்மாறாக இந்தியக் கூட் டுறவுக்கு, பாகிஸ்தானும் திராவிட நாடும் நீங்கிய இந்தியாவுக்கு அய லினப் படையெடுப்பக்களின் வர லாறன்றி வரலாறில்லை. இந்தியக் கூட்டுறவின் கீழ் கோடியில், இந்தி யாவில் பாதியும் கிழக்குப் பாகிஸ் தானில் பாதியுமாகப் பிரிந்து கிடக் கும் வங்கம், விதேகம் (பீகார்) ஆகிய கிழ் திசைப் பரப்பில் கண்ட அசோகனும் சந்திரகுப்தனுமன்றி உள்நாட்டு அரசர்களாக அவர்கள் எவரையும் காட்டமுடியாது. அவர் களில்கூட இன்று பாரத பக்தர் பெருமைப்படக்கூடிய அளவில் உலகப் புகழ் நிறுவியவன் அசோ கன்மட்டுமே. ஆனால் பாரதத்தின் புராணமும் இதிகாசமும் இந்த அசோகனை அறிந்ததில்லை, அறிந்த அளவில் பெருமைப்படுத்திப் பாராட்டியதுமில்லை. அசோகன் பண்பாட்டைப் பழய பாரதம் அயல் பண்பாடு, வேண்டாப் பண்பாடாக விலக்கி வைத்திருந்தது என்பதை இன்று யாரும் மறக்கமுடியாது, மறைத்தே வருகின்றனர். இந்தியா தவிர மற்ற எல்லா நாகரிக நாடு களும் வரவேற்ற பண்பாடு, அசோ கர் பின்பற்றிய புத்தர் பண்பாடு. இதற்கேற்ப, புராண இதிகாசங்கள் மெய்யும் பொய்யும் கலந்து பெரு மைப்படுத்திய இந்திய-இந்து அரசு அசோகன் அரசன்று, புத்த சமயப் பேரரசரான கனிஷ்கன், ஹர்ஷன் கூட அல்லர்-சந்திரகுப்தன் அரசு மட்டுமே என்பது கவனிக்கத்தக் கது.

திராவிடம் பண்டிருந்து பிரிட் டிஷ் ஆட்சிக் காலம்வரை உலகின் செல்வவளமிக்க நாடு. திராவிடர் நாகரிக உலக நாடுகளெங்கும் சென்று குடியேறியும், வாணிகம் வளர்த்தும் உலகின் குபேர நாடு களில் முதல் குபேர நாடாகத் தம் மாநிலத்தை வளமாக்கியிருந்த னர். இன்றுபோல் உலகின் வாணிக விலைக்களமாகத் தென் னாடு என்றும்- அணிமைக் காலம் வரையிலும் இருந்ததில்லை. தொழி லும் வாணிகமும் பெருக்கி, உல கெங்கும் தன் விலையேறிய சரக்கு களை அனுப்பி, நாகரிக உலகையே திராவிடர் தம் வாணிகப் பெருங் களமாக்கியிருந்தனர். இதற்கேற்ப ஆழ்கடல் கடக்கும் கப்பல்களும் கப்பல் தொழிலும் திராவிடத்திலே செழிப்புற்றிருந்தன. இராசேந்திர சோழன் 12-ம் நூற்றுண்டில் கடா ரம் அதாவது தென்கிழக்காசியை வென்று ஆண்டது இத்தகைய கப்பல் தொழிலின் உருத்தகு வெற் றிக்கு ஒரு சான்று. 19-ம் நூற் றுண்டின் முற்பகுதியில் திராவிடக் கப்பல்கள் புதிதாக உலகில் எழும் வரை உலகின் சிறந்த கப்பல்களும் மிகப் பெருங் கப்பல்களும் தென் னகத்தில் செய்யப்பட்ட திராவிடக் கப்பல்களே. வெள்ளையர் திரா விடத் தச்சர்களைத் தம் நாட்டுக்குக் கொண்டு சென்றுதான், மேற்திசைக் கப்பல்களை ஆட்கொள்ளும் அளவு தம் கப்பல் படையைப்பெரிதாக்கிக் கொண்டனர் என்பதை, முக்கர்ஜி என்பாரின் ''இந்தியக் கப்பல் தொழிலும் கடலோடி வாழ்வும்'' என்ற வரலாற்று ராய்ச்சி ஏடு எடுத்துக் காட்டுகிறது. 1840-ம் ஆண்டு வெள்ளையர் இந்தியாவில் நிறைவேற்றிய 'கப்பல் தொழில், கடல் வாணிகச் சட்ட'மே உலகக் கடல்களில் திராவிடருக்கு இருந்து வந்த இந்த வானுயர் செல் வாக்குக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. திராவிடர் வரலாறு, தமிழிலக்கிய முழுவதுமே தென்ன வரின் இக்கடலோடிப் பண்புக்குச் சான்றுகள் ஏராளமாகக் காண லாம். கப்பல் தொழிலைப்போலவே மற்றப் பல்வேறு வகைக் கைத் தொழில்களிலும்-உழவு, நெசவு, பட்டுத் தொழில், சுரங்கத்தொழில், முத்துமணி, பொன் வெள்ளி சார்ந்த கலைத்தொழில்கள் முதலிய எல்லாத் தொழில்களிலும் திரா விடமே உலகின் மையத் தொழிற் களமாய், உலகின் செய்பொருள் மூலதளமாய் இருந்தது. வெள்ளை யர் முதலில் 16-17-ம் நூற்றுண்டு களில் இவற்றைத் தம் அரசியல் ஆதிக்கத்தாலும், அதனை அடுத்து 18-19-ம் நூற்றுண்டுகளில் தமக் குப் புதிதாகக் கிடைத்த இயந்திர சாதனத்தாலும் அழித்து பின்பே, திராவிடத்தின் இத்தொழில் தலை மையும் வாணிகத் தலைமையும் அதன் மீது அரசியலாதிக்கம் செலுத்திய பிரிட்டனுக்குக் கை மாறின. இதனைக் கார்ல்மார்க்ஸ் தம் உலக வரலாற்று விளக்கத்தில் எடுத்துக் காட்டியுள்ளார்.

இவ்வெல்லா வகைகளிலும் திரா விட நாட்டுக்கும் அதன் இன மரபுக்கும், நாகரிகத்துக்கும் நேர் மாறான இயல்புடையது திராவிடம் நீங்கிய பாரதத்தின் வடதிசை உரு விலாப் பரப்பு. திராவிடர் பண் டைக் கடலோடி இனங்களில் முதல் இனமாவர்; ஆரியரோ உல கின் பண்படா நாடோடி இனமாய் வாழ்வு தொடங்கி இன்றுவரை கருத்திலும் கனவிலும்கூட அது கடந்து சிந்தனை செலுத்தாதவராய் உள்ளனர். தண்ணீரைக் கண்டால் வாலைக் கால்களுக்கிடையில் சுருட்டிப் பதுங்க வைத்துக் கொண்டு பின்னேறும் 'நாட்டு நாய்' போன்றவர்களாகவே அவர் கள் இன்றும் உள்ளனர். தொல் காப்பிய காலத்திலிருந்து தமிழருக் குரிய 'முந்நீர் வழக்கம்' அதாவது கடல் வாணிக மரபு, அவர்களும் அவர்கள் இலக்கியமும் அறியா தது. அவர்களின் சுமிருதி ஏடுகள் திராவிடருக்குரிய தகா வழக்கம் ஆரியர் மேற்கொள்ளக்கூடாத பெரும் பழி என்று கண்டித்தன. திராவிடர் கடல் கடந்து வாணிக மும் குடியேற்றமும் கண்டனர். ஆரியரோ கடல் கடந்தவரை திரா விடரைக்கூடத் தம் சாதி வருணா சிரமக் கோட்டையிலிருந்து விலக்கி வைக்கச் சட்டம் இயற்றினர். திரா விடப் பேரரசர் உலகெங்கும் கடல் கடந்த பேரரசுகளும் பேரரசத் தொடர்புகளும் கொண்டனர். இரண்டாயிர ஆண்டுகட்கு முற் பட்ட பாண்டியர் உரோமப் பேரர சர் அகஸ்டஸுடன் தூதுத் தொடர் பும் அரசியல் கூட்டுறவும் கொண் டனரென்றால், அதே உறவை 13-ம் நூற்றுண்டுக்குரியபாண்டியர், சீனப் புகழ்ப் பேரரசன் குப்ளாகானுடன் மேற்கொண்டிருந்தார். இவ்விரு கோடிக்கும் இடைப்பட்ட ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கிடையே இதேபோன்ற தொலை உலகத் தொடர்பு பல்லவப் பேரரசருக்கும் சோழப் பேரரசர்க்கும், சாளுக் கியப் பேரரசர்க்கும் இருந்தது. ஆனால் வட திசையோ நிலப் பேரர சன்றிக் கடற் பேரரசு அறியாதது. கடல் கடந்த எந்த நாட்டின் பெய ரும்கூட-இராமாயணம் குறிப்பிடும் புராணக் கற்பனை இலங்கை தவிர- வேறு எதுவும் வட திசை மரபு அறியாதது. புத்த சமயப் பிரசாரம் காரணமாகத் தற்செயலாக அசோ கன், ஹர்ஷன் காலங்களில் பிற நாகரிக நாட்டவர் இந்தியாவுடன் கொண்ட தொடர்பன்றி, வடதிசை அரசர் பேரரசர் எத்தொடர்பும் வெளியுலகுடன் நாடியதில்லை. அவர்கள் இலக்கியத்தில் உலகம் என்பது வட இந்தியாவாகவே இருந்தது- தென்னகத்தைக்கூட அவர்கள் அறிந்ததில்லை. அதே சம யம் தமிழர் பண்டுதொட்டே இமய உச்சியில் ஏறித் தமிழ்க்கொடி பொறிக்கும் ஆர்வக் குறிக்கோள் உடையவராய் இருந்தனர்-திரை கடலோடியும் திரவியம் தேடு என்று சிறுவருக்கே போதித்தனர்!

ஆரியர் வருவதற்குமுன் திரா விடருக்கு இருந்த கோட்டை கொத்தளங்கள், வீரம் செல்வம், உழவு தொழில் வளங்கள், வாணிக வளம் ஆகியவைபற்றி ஆரிய வேத உபநிடதங்களே ஏராளமாகச் சான்று பகர்கின்றன. ஆரியர் வறுமை வாழ்வு, வீரமற்ற வஞ்சகச் சூழ்ச்சி மரபு, தொழில் வாணிக மீது வெறுப்பு, உழவு மீதுவெறுப்பு ஆகியவை இன்னும் ஆரிய வருணா சிரம மரபை உற்று நோக்கு வோர்க்கு வெள்ளிடை மலையாக விளங்கும். திராவிட மரபுப்படி உழவுத் தொழிலுக்குரிய வேளாள ரும் மற்றத் தொழிலாளரும் வீர மரபினருமே உயர் குடியினராகப் போற்றப்படுகின்றனர். ஆனால்

— 3ம் பக்கம் —

விற்பனையாகிறது!

தென்னாட்டுப்போர்க்களங்கள்

பன்மொழிப்புலவர் எழுதியது

தமிழ் வாழும் இடமெல்லாம் தலைதூக்கி நிற்கும் வரலாற்றுக் கருவூலம்

விலை ரூ. 8.

ஔவை நூலகம்,
4/141, பிராட்வே, சென்னை-1.

திருக்குறள் தழுவல் நூலாம்!

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே தமிழ்நாட்டில் அழையாத விருந்தாளியாக வந்து நுழைந்த ஆரியர் தமிழ்மொழியின் வீழ்ச்சிக்குத் தம்மாலியன்றவாறு தொண்டாற்றி வந்தனர். ஆனால் எத்தனையோ கடல் கோள்களாலும் அழியாது நிலைத்து நிற்கின்ற எமது கன்னித்தமிழ், அத்தகையவர்களின் முயற்சிகட்குப் பலியாகவில்லை. எனினும், ஆரியர் தம் முயற்சியில் தளராதவர்களாய்த் தமிழை ஒழித்தற்கு மேன்மேலும் முயன்று வந்தனர். அங்ஙனம் வடவர் செய்த முயற்சிகளில் ஒன்று தமிழ் இலக்கியங்கட்கு உரைசெய்தலும் புதுவதாக உரைநூல்கள் செய்வதுமாகும். அங்ஙனம் அவர்கள் எழுதிய இலக்கண, இலக்கிய, உரைநடை நூல்களில் ஆங்காங்கே வடமொழியின் ஏற்றங் குறித்தும், வடவர்தம் உயர்வு குறித்தும் தயங்காது எழுதினர். தமிழ் நூல்கள் செய்யத் தலைப்பட்ட அத்தகையோரை, தமிழ்க்குச் சேவை செய்யும் நல்லறிஞர் எனத் தமிழர் போற்றினர். அந்நூற்களிலுள்ள குறைபாடுகளை உணர்ந்த சிலரும் மறுப்பேதும் கூறாதவர்களாய் வாளாவிருந்து விட்டனர்.

தமிழர்கள் விழிப்புற்றுத் தம்மொழி, தம் நாடு எனப் பற்றுக்கொண்டு பேசுகின்ற இற்றை ஞான்றும், தமிழைக் குறைகூறிச் சிலர் திரிகின்றனர். திருக்குறள், வடமொழி நூல்களினின்றும் வடித்தெடுத்த ஒன்றே என, ரா. ஸ்ரீ. தேசிகன் என்பார் கூறுகின்றார். அவர் தினமணிச் சுடர்—ஞாயிறு மலரில் (22-9-57) சமுதாயமும் இலக்கியமும்—என்னும் கட்டுரைத் தொடரின்கீழ், வள்ளுவர்-காமத்துப்பால் என்னுங் கட்டுரையிற் கூறுகின்ற கருத்துக்கள் அறிவுக்கு ஒவ்வாதவையாய் இருக்கின்றன. திருக்குறள் குறித்து அவரது கருத்துக்கள் இன்ன என்பதை ஈண்டுக் கூறுவேன்.

முதலாவதாக வள்ளுவர் ஓர் வேந்தருக்கு அமைச்சராய்த் திகழ்ந்திருக்க வேண்டும் எனக் கூறித் தமது கரைகடந்த ஆராய்ச்சித் திறனை வெளியிடுகிறார். வடமொழியிலும், தமிழிலும் வள்ளுவர் திளைத்தவர் என்பதில் யாதொரு ஐயமுமில்லை என்பது தேசிகர்தம் கூற்று. மேலும், பாரதம், பகவத் கீதை, மநுஸ்மிரிதி, சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம் ஆகிய வடமொழி நூல்களின் சாரத்தையே வள்ளுவர் தம் நூலில் வடித்துத் தருகிறார் என்பதும் தேசிகர் கொள்கை.

தேசிகர், தம் கொள்கைகளைச் சான்றுகள் இன்றியே நிறுவ முற்படுகிறார். பாரதத்தில் தமிழர் பண்பாட்டிற்கும், பழக்க வழக்கத்திற்கும் இடமேயில்லை. பிறனது மனைவியை விழைதலுங் குற்றமெனக் கூறிய திருவள்ளுவர், பெண்ணொருத்தியை ஐவர் மனைவியாகக் கொண்டிருந்தனர் எனக் கூறும் பாரதத்தினைப் படித்து அதனைத் தம் நூலில் வடித்தார் எனக் கூறுவது எங்ஙனம் பொருந்தும்?

ஒழுக்கத்தின்மூலம் மனிதனுக்கு நன்மை விளைகின்றது எனக் கீதையும், மநுவும் கூறலாம். ஆனால் திருக்குறள் கூறுவதென்ன? தமக்கு நல்லன கிடைக்காதவிடத்தும் கைம்மாறு கருதாது நல்ல செயலைச் செய்தல் வேண்டும் என்று கூறுகின்றது. உலகத்திற்கே ஒரு நீதி நூலென விளங்கும் திருக்குறளை நன்கு கற்றவர்கள், ஒரு குறிப்பிட்ட குலத்திற்கே நீதிநூல் என விளங்கும் மநு முதலிய வடமொழி நூல்களை மனத்தாலும் எண்ணுதல் செய்யார் என்றார் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. இதனால், திருக்குறள், மநு முதலிய வடமொழி நூல்களின் வழிவந்ததென்று கூறுதல் எத்துணை அறியாமையாகும் என்பது நன்கு புலனாம்.

திருவளளுவர் பொருட்பாலிற் கூறுவன சாணக்கியரின் அர்த்த சாஸ்திரத்தினின்றும் அகழ்ந்தெடுக்கப் பட்டன என்பார் தேசிகர். கி. மு. நான்காம் நூற்றாண்டில் இந்தியாவில் ஆண்ட சந்திரகுப்த மௌரியருக்கு சாணக்கியர் என்னும் அமைச்சர் ஒருவர் இருந்தார் என்றும் அவர் இயற்றியதே அர்த்த சாஸ்திரம் என்றும் சரித்திரம் கூறும். ஆனால் அர்த்த சாஸ்திரத்தினை நன்கு ஆராய்ந்த அறிஞர் பலர் அந்நூல் மோரியர் காலத்திற்கு ஒரு சில நூற்றாண்டுகட்குப் பின்னர் எழுதப்பட்டதெனவும், அர்த்த சாஸ்திரம் எழுதிய சாணக்கியரும், மோரியர் காலத்திருந்த சாணக்கியரும் வெவ்வேறாதல் வேண்டும் எனவும் சான்றுகள் காட்டி நிறுவுகின்றனர். இதனை அறிஞர் பா. நடராசன் அவர்கள் எழுதிய 'திருக்குறளும் பொருளாதாரமும்' என்னும் கட்டுரைக் கருவூலத்தால் தெள்ளிதின் உணரலாகும்.

எனவே, அறிஞர்தம் முடிபால் அர்த்த சாஸ்திரம் கி. பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டில் எழுதப்பெற்றதென்று அறியலாகும். அதன் பின்னர் திருக்குறள் எழுதப் பெற்றதென்றால் அதற்கு முன்னரே யாக்கப் பெற்ற புறநானூறு, முதலிய சங்க இலக்கியங்களிலும், சிலம்பு மேகலை போன்ற காவியங்களிலும் திருக்குறட் கருத்துக்கள் பல எடுத்தாளப்பட்டுள்ளன. வாழ்க்கையின் நெறிகளைச் சுருக்க வகுத்த இலக்கண நூலாகிய திருக்குறள் மேற்சொன்ன நூல்களினின்றும் சொற்றொடர்களை எடுத்தது எனக் கூறுதல் இலக்கிய மரபிற்கு முற்றிலும் முரண்பட்டது. எனவே, திருக்குறள் கி. மு. முதல்நூற்றாண்டுக்கும் கி. பி. முதல் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டதென்பதும், அர்த்த சாஸ்திரம் மோரியர் காலத்தில் எழுதப்பட்டதல்ல என்பதும் அறிஞர் பா. நடராசன் அவர்கள் கட்டுரையால் அறிதல் கூடும்.

பிறநாட்டு நல்லறிஞரும் வள்ளுவர் கூறிய பொருட்பாலைப் போற்றியுரைக்கின்ற ஞான்று, தேசிகர், அறத்துப்பால், காமத்துப்பால் ஆகியவற்றினும் பொருட்பால் நிலையிழிந்துவிட்டது எனத் துணிந்து உரைக்கின்றார். மேலும் இங்ஙனம் வள்ளுவர் செய்த குறையை, அவர்தம் ஞான புத்திரனாகிய கம்பர் நிறைவு செய்கின்றார் எனவுங் கூறுகின்றார். எவ்வாற்றான் நிறைசெய்தார் எனக் கூறவில்லை.

திருவள்ளுவர், வடநூலார் கூறும் தர்ம, அர்த்த காமம் என்னும் மூன்றையுமே அறம், பொருள் காமம் எனும் முப்பாலாய்த் தம் நூலிற் கூறுகின்றார் என்பார் தேசிகர். வடநூலார் கூறுகின்ற அறம், ஆரியரின் பண்பாட்டை ஒட்டியது. ஆனால் வள்ளுவர் கூறும் அறம் தமிழர்க்கேயுரிய தனிப் பெருஞ் சிறப்பினை உணர்த்துவது. எடுத்துக்காட்டாக ஒன்று கூறுவேன். திருவள்ளுவர், பிறனது மனை விழைதலைக் குற்றமெனக் கடிந்து பிறனில் விழையாமை என்னும் ஓர் அதிகாரத்தை வகுத்தருளினார். ஆனால் வடநூலார், ஒருவன் பெறுகின்ற இன்பம் சுயகீயம், பரகீயம் என்னும் இருவகைத்து எனக் கூறினர். சுயகீயம் என்பது தன் மனைவியோடும், பரகீயம் என்பது பிறன் மனைவியோடும் கூடிப் பெறுகின்ற இன்பம். இங்ஙனம் பரகீயம் என ஒன்றைக் கூறினரேயன்றி அதனைக் குற்றமென்று தடுத்தாரில்லை. இங்ஙனமிருக்க வடநூலார் செய்த அறநெறிகளை வள்ளுவர் கடைப்பிடித்தார் என்று கூறுவது அறியாமையன்றோ?

இங்ஙனமே, வடநூலாரின் பொருள் நூலினை வள்ளுவர் தம் நூலில் வடித்துள்ளார் எனுங் கூற்றும் உண்மையன்று. மேலும், "திருக்குறள் போன்ற நீதி நூல் வள்ளுவர் காலத்திற்குமுன் ஒன்றிருந்தது. எனக் கூறுதற்குப் போதிய அகச் சான்றுகள் இல்லை" எனும் வி. ஆர். ஆர். தீட்சிதர் அவர்களின் கருத்தும் ஈண்டு நோக்கற்பாலது. வள்ளுவர் தம் நூலிற் கூறுகின்ற காமம் எனுஞ் சொல் வட சொல் என்பதோடு, வட நூலார் செய்த கொக்கோகம் முதலிய இன்ப நூல்களைப் பயின்றே வள்ளுவர் காமத்துப்பால் எழுதினார் என்பது தேசிகர் கூறும் உண்மை. 'காமம்' எனுஞ் சொல் ஓர் சிறந்த தமிழ்ச் சொல்லே என்று, அறிஞர்கள் தெ. பொ. மீ, மொ. அ. துரை அரங்கசாமி ஆகியோர் அறுதியிட்டுரைக்கின்றனர். வடமொழியில் வருகின்ற காமம் என்னும் சொல் ஆசை அல்லது விருப்பம் எனும் பொருளுடைத்து. தமிழ்க் காமச் சொல்லோ நிறைவுஎன்னும் பொருளுடையது. இதனை நன்கு உணர்த்துவான் வேண்டி, மேற் சொன்ன அறிஞர்கள், தொல்காப்பியம், குறுந்தொகை ஆகிய நூல்களில் காமம் எனுஞ் சொல் பயிலப்படுகின்ற அடிகளை மேற்கோள் காட்டுவர். மேலும் வட நூலின்கண்ணுள்ளதுபோல் இன்பநூல் எனத் தனித்த ஒன்று தமிழிற் கிடையாது. வடநூலார், இன்ப நூலில் ஆணும் பெண்ணுமாகிய இருவர் எவ்வகையான் தம்முட் கூடி இன்புறுதல் கூடும் எனக் கூடி மகிழ்தலின் முறைமையினைப் பலபட விரித்துரைப்பர். ஆனால் வள்ளுவர், தாம் எழுதிய காமத்துப் பாலில் உளம் ஒத்த தலைவன் தலைவியரிடை நிகழும் களவு, கற்பு என்னும் இருவகை ஒழுக்கங்களின் தன்மைகளையே உரைக்கின்றார். இதனால் வடநூலார் தம் காம நூற்கும், வள்ளுவர் தம் காமத்துப் பாலுக்கும் உள்ள வேற்றுமைகள் நன்கு விளங்குதலன்றி, வடநூலைத் தழுவி வள்ளுவர் காமத்துப பாலை எழுதினாரல்லர் என்பதும் பெறப்படுகின்றது.

இனி, வள்ளுவர், கள்ளுண்ணாமை, புலான் மறுத்தல், பிறன்மனை விழையாமை ஆகிய அதிகாரங்களைக் கூறி இத்திறத்தவாகிய முத்தொழில்களையும் குற்றமெனக் கடிதல்கொண்டு, அவரது காலத்திற்குமுன் தமிழகத்து வாழ்ந்த மக்கள், கள்ளுண்ணலையும், புலால் உட்கொள்தலையும், பிறன் மனை விழைதலையும் தம்மரபாகக் கொண்டிருந்தனர், எனுந் தேசிகர் கூற்று அறிஞர் கொள்கின்ற கருத்துக்கு முற்றிலும் முரண்பாடாகின்றது. தேசிகரது கருத்தின்படி திருவள்ளுவர் காலத்திற்குப் பின்னர் தமிழகத்து மக்கள் அனைவரும் மேற்சொன்னவை போன்ற தீய தொழில்களை விடுத்து நன்னெறியினின்றொழுகினர் என்பது பெறப்படுகின்றது. இதுவும் அறிவின் முரண்பட்டதாகும். இவரது அறிவற்ற ஆய்வு திருக்குறட் கருத்துக்களையே முற்றிலும் மாற்றியமைக்கின்ற ஓர் முயற்சி என்பதில் ஐயமேதுமில்லை. தமிழகத்து மக்களுள் அறிவற்ற சிலர், கள் உண்ணல், புலான் உண்ணல், பிறன் மனை விழைதல் ஆகிய தீச்செயல்களில் ஈடுபட்டிருந்தனரென்பதும், அத்தகையோர்க்கு அவற்றின் கேட்டினை எடுத்துரைத்து, நன்னெறி காட்டுவான் வேண்டியே, கள்ளுண்ணாமை, புலான் மறுத்தல், பிறனில் விழையாமை போன்ற அதிகாரங்களை வள்ளுவர் எழுதினாரென்பதும், ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் கண்ட முடிபாமென்க.

திருவள்ளுவர் தம் நூலிற் பலவிடங்களில் வட சொற்களைத் தமிழிற் பெயர்த்து வழங்கியுள்ளார் எனவும், எடுத்துக் காட்டாக 'கிருதக்னன்' என்னும் வட சொல்லையே வள்ளுவர் செய்ந்நன்றி கொன்றவன் எனத் தமிழிற் படுத்து வழங்கியுள்ளார் எனவும் தேசிகர் துணிந்து எழுதுகிறார். இஃது, உண்மையல்லாதவற்றையும், வலிந்து தம் வழிப்படுத்தி, தாம் கொண்ட கொள்கையினை நிலை நிறுத்துகின்ற தேசிகர் தம் தனித் திறமைக்கோர் எடுத்துக் காட்டாய் மிளிர்கின்றது. இத்தேசிகர், தமது கட்டுரையில் பலவிடங்களில் அழகிய தமிழ்ச் சொற்குப் பதிலாக வடமொழிச் சொற்களைப் புகுத்தி எழுதுதலை நாம் காணலாம். இங்ஙனமே அக்காலத்துத் தமிழ் இலக்கியங்களில் வழங்கிய அழகிய தமிழ்ச் சொற்களை வட நூலறிஞர் வடமொழியிலாக்கி பின்னர் அவ்வட சொற்களையே மொழிபெயர்த்துத் தமிழில் வழங்கினர் தமிழ் நூலார் எனக் கூறுதலுங் கூடுமன்றோ? வடமொழி, தமிழ்ச் சொற்களை வடமொழிக் கடன் வாங்கிய 'தன்மையினை அறிஞர் அ. சிதம்பரநாதன் அவர்கள் 'வடமொழியிற் தமிழ்ச் சொற்கள்' எனுங் கட்டுரையில் அழகுபடக் கூறுகின்றார்.

இங்ஙனமாய், தேசிகர், திருக்குறள்பற்றி ஆய்ந்து, வடமொழி நூல்களினின்றும் வடித்தெடுத்த ஒன்றே திருக்குறள் என்னும் தமது கருத்தினைச் சான்றுகள் எதுவுமின்றி வலிந்து கூறியிருக்கிறார். ஆனால், தமிழர்கள் அதை ஏற்றுக் கொள்வதற்கில்லை.

—மு. செ. குமாரசாமி

நன்னூல் நன்னூலே!

கடந்த 21-9-57ம் தேதி 'தென்றல்' இதழில் பவணந்தியாரின் இலக்கண நூலான நன்னூல் பற்றி பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர் எம். ஏ. அவர்கள் **'நன்னூல் நன்னூலா?'** என்ற தலைப்பில் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையைத் தீட்டியிருந்தார்கள். அதற்கு இந்தக் கட்டுரை மறுப்பாக அமைந்திருக்கிறது. இக்கட்டுரையாளர், சென்னை - சௌகார் பேட்டை ஜெயின் உயர்நிலைப்பள்ளி தலைமைத் தமிழாசிரியராவார். [ஆ-ர்.]

— எழுதியவர் —

வித்வான்
எஸ். பி. கெம்பீர நைனர்

ஆசிரியர் பவணந்தி யடிகளார் தமது நூலுக்கு அமைந்திருக்கும் நன்னூல் என்ற பெயர் பொருத்தமுடையது தானா? என்று வினவுங் கருத்தில் **"நன்னூல் நன்னூலா?"** என்று கேட்டிருப்பது மரத்தைக் கண்ட ஒருவன், இந்த மரம் மரமா? என்று கேட்பதுபோல வினாவில் தவறுபட்டு வினா வழுவாய் அமைந்துள்ளது.

அன்றியும் "நன்னூல் நன்னூலா?" என்ற தொடரில் அமைந்திருக்கும் இரு சொற்களுள், முறையே முன்னையது நன்னூல் என்ற துணிபையும் பின்னையது நன்னூலா? என்ற ஐயத்தையும் உளவாக்கி தமக்குள் மாறுபட்டு நிற்றலால், மாறுகொளக் கூறலாயும் அமைகிறது. இது மாறுகொளக் கூறலாய் அமைதல்போலவே மேலே சார்பு எழுத்துக்களைப்பற்றிப் பேசுமிடத்தில், அச்சார்பு எழுத்துக்களின் வகைகளைப் பெருக்கி "அவ்வகைகளின் தொகையை விரித்து விழுமிய பயனின்றி மாணவர்க்கு வீணாக வெறுப்பை விளைத்துள்ளார்" என்று கூறி, நன்னூலார் கூறும் சார்பு எழுத்துக்களின் வகையோடு விரியும் வேண்டாப் பகுதியென மறுக்கப்பட்டுளது.

அதற்கடுத்தபடி "இன்னின்ன எழுத்துக்கள் இன்னின்ன இடத்தில் குறுகி ஒலிக்கும் என மாத்திரை குறிக்கும் இடத்தும், புணரியலிலும் கூறினாற் போதுமானதாம்" எனக் கூறி, முன்பு தாம் மறுத்த அச்சார்பு எழுத்துக்களின் வகைகளை ஏற்றுக்கொள்ள உடன்படுகிறது. எனவே, முன்னே வேண்டாப் பகுதியென மறுத்தலும், பின் வேண்டும் பகுதியென உடன்படுதலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டு நிற்றலில், இதுவும் மாறுகொளக் கூறலேயாய் அமைகின்றது.

இனி "நன்னூல்நன்னூலே" எனனும் நம் கட்டுரையை முற்ற முடித்தற்கு அநுகூலமாக, முதற்கண் நூலாசிரியர் வரலாற்றையும், நூல் எழுந்த காலத்தையும், நூலின் அமைதியையும் அறிந்துகொண்டு, மீண்டும் இந்தச் சார்பெழுத்து முதலியவற்றின் தன்மைகளை ஆராய்வோமாக.

நூலாசிரியர்

'சன்மதி' 'யசோமதி'யென்ற பெயர்களும், 'பவணந்தி' 'தருமநந்தி'யென்ற பெயர்களும்பண்டுதொட்டு இன்று காறும் தமிழ்நாட்டு ஜைனர்களுக்கே யிட்டு வழங்கப்படும் பெயர்களாக அமைந்துள்ளன. ஆதலின் பவணந்தியென்ற பெயர் பெற்ற நம் நன்னூலார், தமிழ் நாட்டு ஜைனரே யென்பது நாம் அறியக் கிடக்கும் உண்மையாகும். இதற்கு ஆதாரமாக நன்னூலார்,

'பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்தவனும் முச்சகம் நிழற்றும் முழுமதி முக்குடையவனும்' ஆகிய அருகக் கடவுளை வணங்கியிருப்பதும், பவணந்தி யடிகள் தமிழ்நாட்டு ஜைனர் என்பதை அறிவிக்கின்றது. இப்படியிருக்க, யாதொரு ஆதாரமும் இன்றி நன்னூலாரை ஆரிய அந்தணர் யென்றால், அதை ஆராய்ச்சியுலகம் அடியோடு ஏற்காது மறுக்கும் எனத் துணிந்து கூறலாம்.

நூலெழுந்த காலம்

கி. பி. 1947-க்கு முன்பு ஆங்கிலயாட்சிக்கு உட்பட்டு, தம் நடை யுடை, பாவனைகளால் ஆங்கிலேயரைப்போலவே மாறி அவர் தம் ஆங்கில மொழியையும் அழகு பெறப் பயின்று நம் நாட்டு பழக்க வழக்கங்களையும், நடை யுடை பாவனைகளையும் நம் தாய்மொழிப் பயிற்சியையும் பெரும்பாலும் மறந்து, ஆங்கில நாகரிகத்தையே உயர்ந்ததாகக் கொண்டிருந்த நம் தமிழ்நாடு தொல்காப்பியர் **காலத்திற்குப் பின்பும்** நன்னூலார் **காலத்திற்கு முன்பும்** ஆகிய இடைப்பட்ட காலத்தில் வடவர் தொடர்பைப் பெரிதும் மேற்கொண்டு, அவர் தம் நடை யுடை பாவனைகளில் பெரிதும் ஈடுபட்டு இருந்ததோடன்றி, அவர் தம் வடமொழியையும் தமிழில் கலந்து வழங்குதலை உயர்ந்த நாகரிகமாகக் கருதி வந்தது. அக்காலத்துத் தோன்றிய இலக்கியமெல்லாம், வடமொழிக் கலப்பையுடையனவாய் தொல்காப்பிய இலக்கணத்துக்கு ஒவ்வாமலும், தமக்கென இலக்கணம் ஒன்று இல்லாமலும் தவித்திருந்தன. அது கண்ட திருந்திய செங்கோல் சீயகங்கன் என்னும் மன்னன், அக்காலத் தமிழ் மொழிக்கு ஏற்ற இலக்கணம் இல்லாமை கண்டு வருந்தி, பவணந்தி முனிவரை யணுகி,

'அரும்பொரு ளைந்தையு
மியாவரு முணரத்
தொகைவகை விரியிற்
றருகென'

வேண்டினன். வேண்டவே "பன்னரும் சிறப்பின் பவணந்தி" தன் கால இலக்கியங் கண்டு அதற்கேற்ற இலக்கணமாகவும், இறந்த வழக்கை விலக்கி, எதிர் கால வழக்கைக் கையாண்டு தொல்காப்பியர் காலத்து வழங்கிய எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றும் தம் காலத்து எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்தாய் வழங்கியது கண்டு சீயகங்கன் அரும் பொருள் ஐந்தையும் எனக் கேட்டான் என்று உணர்ந்து, அவ்வைந்தையும் ஐந்ததிகாரமாக்கி 'நன்னூல் பெயரின் வகுத்தனன்' என அறிகிறோம். நன்னூலார்,

"இலக்கியம் கண்டதற்(கு)
இலக்கணம் இயம்பலின்"
(நன்-141)

என்பதால் அவர் தம்கால இலக்கியத்திற்கேற்ற இலக்கணம் இயற்றினர் என்பதூஉம்,

"இறந்தது விலக்கல்
எதிரது போற்றல்"
(நன்-14)

என்பதால், அவர் இறந்த வழக்கை நீக்கி எதிர்கால வழக்கைக் கையாண்டார் என்பதூஉம். நாமறியும் உண்மைகளாகின்றன.

நன்னூல் நிறை நூலே! குறை நூலன்று!!

சீயகங்கன் அரும்பொருள் ஐந்தையும் தருகவெனக் கேட்டதாகவும, பன்னருஞ் சிறப்பின் பவணந்தி பாடித் தந்ததாகவும் பாயிரஞ் செப்புகின்றது. ஆகலின் ஐந்தும் அமைந்ததாய் அந்நன்னூல் நிறை நூலே ஆம் என்க. அப்படி அன்றி

"எழுத்தும் சொல்லும்
எனுமிரு பால்தமை
பழுதிலாச் சிறப்பின்
பவணந்தி"
என்னு நாமத்து
இருந்தவத் தோனே
"நன்னூல் பெயரின்
வகுத்தனன் நலம்பெற"

என்று பாயிரஞ் செப்பாமல் வாளா நன்னூற் பெயரின் வகுத்தனன் என்பதால், ஐந்தையும் வகுத்தான் என்பதும் தெளிவர். அதுமட்டுமன்றி,

"பழையன கழிதலும்
புதியன புகுதலும்
வழுவல கால
வகையி னானே"

என்ற புறநடைச் சூத்திரம் இந்நன்னூலில் அமைந்துள்ள ஐந்து அதிகாரங்களையும் சிங்க நோக்காய் நோக்குவதோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று என்று மயிலைநாதர் குறிப்பதிலிருந்தும், நன்னூல் ஐந்து அதிகாரமும் அமைந்த ஒரு முழு நூலே குறை நூலன்று என்று கூறுக. கூறவே "நன்னூல் தலையான பொருளதிகாரம் இன்மையின் முண்டமே என்க" என்னும் கூற்று வழூஉச் சொல் புணர்த்தலாய் அமைவதைக் காணலாம்.

இத்தகைய முழு நூலாம் நன்னூலின் இயல்பை இனிச்சிறிது நோக்குவோம்.—

ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியம் எனும் இலக்கணப் பேரரசன், நம்முடைய தமிழிலக்கியமெனும் உலகினைத் தனது இலக்கண விதி என்னும் ஒப்பற்ற செங்கோலோச்சி ஒரு குடைக் கீழ் ஆண்டு வந்தான். பல காலத்திற்குப் பின்னர் அவன் வழித் தோன்றலாக அவன் மரபில் "பின்னூல் பலவும் தனக்கிணை இலவென" பெரும் பெயர் பெற்ற நன்னூல் இலக்கணம் என்னும் அரசிளங்குமரன் அவதரித்து, உலகியல் நன்கு முற்றப்பெற்ற ஆட்சி பருவத்தன் ஆயினான். அவன் ஆட்சி நலனை அறிந்த தொல்காப்பிய வரசன், தன் ஆட்சிப் பொறையை நன்னூல் தலையிலிறுத்தித் தான் இன்றளவும் ஓய்வு பெற்று வருகிறான்.

தமிழிலக்கிய உலகினை ஆளும் அரசனும் நன்னூலும், தன் ஆணையாம் செங்கோல் ஓச்சி இத்தமிழுலகில் பிறந்த ஏனைய இலக்கணங்களாகிய சிற்றரசெலாம் வந்து தன் மலரடிவணங்க ஏற்றமும் தோற்றமும் எய்தி, தமிழிலக்கிய வுலகினை ஒரு குடைக்கீழ் இன்றளவும் ஆண்டு வருகிறான். அவன் தன் செங்கோல் சிறப்பு கண்ட தமிழ்ப் புலவராம் குடிகள், நன்னூல் ஆணையிலேயே பெரிதும் திளைத்து தொல்காப்பிய அரசனின் பேரையும் மறந்து

**"முன்னோர் ஒழியப்
பின்னோர் பலரிலும்
நன்னூ லார்தமக்கு
எந்நூலாரும் இணையே"**

எனப் புகழ்வாராயினர். இத்தகைய அதன் பெருமையையும், அதன் ஆசிரியர் ஒரு தமிழர் என்பதையும், அக்காலம் வடமொழி நாகரிகமேற்ற காலமெனவும், அக்காலத்துக்கேற்ற இலக்கண அமைதியைப் பெற்ற நன்னூல் ஒரு முழு நூல் என்றும் நாம் இதுவரையில் அறிந்தோம். "நன்னூல்' நன்னூலா?" என்ற கட்டுரை, நன்னூலில் தவறு எனக் கூறும் பகுதிகளை இனிச் சிறிது ஆராய்வோம்.

நம்முடைய அறிவுக்கெட்டிய பழங்கால முதல், அறிவுலகம் நுண்பொருள் பலவற்றைப் புதிது புதிதாக அறிந்து கொண்டே வருகிறது. ஆராய்ச்சியுலகம் புதிய புதிய ஆராய்ச்சிகளை ஆராய்ந்துகொண்டே வருகிறது. இலக்கிய உலகம் புதிய புதிய இலக்கியங்களை ஈன்றுகொண்டே வருகிறது. விஞ்ஞானவுலகம் வியத்தகு விஷயங்கள் புதியன பலவற்றை விரித்துக்கொண்டே விரைகின்றது. அஞ்ஞான உலகம் ஒரு புறம் மிகப் புதுமையான அஞ்ஞானத்தில் ஆழ்ந்துகொண்டே வருகிறது என்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம் அல்லவா!

அப்படியே தொல்காப்பியர் காலத்தில் இருந்த இலக்கிய ஆராய்ச்சியுலகம், சார்பு எழுத்துக்களை மூன்றாகக் கண்டு கையாண்டு வந்தது. அவ்விலக்கியங்கண்ட தொல்காப்பியர் சார்பெழுத்தினைத் தம் இலக்கணத்தில் மூன்று என முடித்தார். அது பொருத்தமே.

ஆனால் தொல்காப்பியர் காலத்துக்குப் பின்பும், நன்னூலார் காலத்துக்கு முன்பும் இருந்த இலக்கிய ஆராய்ச்சியுலகம் அச்சார்பெழுத்தை மேலும் விரிவாக ஆராய்ந்து தம் இலக்கியங்களில் கையாண்டு காட்டின. காட்டிய அவ்விலக்கியங் கண்ட நன்னூலார், 'சொல்லாட்சியை மறந்துவிட்ட புலவன் இவ்வையம் முழுதுமில்லை காண்பீர்' எனக் கூறுவார்போலத் தம் இலக்கணத்தில் சார்புயெழுத்தின் புதிய விரிவினைத் தொகுத்தும், வகுத்தும், விரித்தும் விளக்கியிருக்கிறார். அப்படி அவர் விளக்கியிருப்பதோடு, அவ்விளக்கம் தம் கருத்தன்று. தம் முன்னோர் கருத்து ஆகும் என்பதை,

'ஒன்றொழி முந்நூற்று எழுபான என்ப" என்று விரிவைக் கண்டவர்களையும் காட்டுகின்றார்.

கோவலன் மதுரையில் கொலையுண்டு இறந்த பின்னர், அழுத கண்ணீரோடு தன் அவைப் புகுந்த கண்ணகியை

**"நீர்வார் கண்ணை
எம்முன் வந்தோய்
யாரை யோநீ
மடக்கொடி யோய்"**

எனக் கேட்ட பாண்டியர்க்கு விடையாய், கண்ணகி தொகுத்தும், வகுத்தும், விரித்தும் தன் வரலாறு கூறியதோடு. மேலும் அரசன் அதுபற்றிய வினா எதுவும் வினவாதிருக்கும் வகையில் அமைந்து, தான் நலம் பல நிறைந்த நாகரிக நங்கை யென்பதையும், தன் கட்டுரை வன்மையையும் காட்டியதாக இளங்கோவடிகள் கூறியிருப்பது, கற்போர் உளத்தைக் களிக்கச் செய்கின்றது. ஆனல் வேண்டாப் பகுதியை விரித்துக் கூறினர் என இகழச் செய்யவில்லை. அதுபோன்றே, இங்கு நன்னூலார் சார்பெழுத்துக்களைப் பற்றிக் கூறிய இலக்கணக் கூற்று, கற்போரைக் களிக்கச் செய்கின்றதேயன்றி "நன்னூல் நன்னூலா?" என்ற கடடுரையைப் போன்று குறைகூறச் செய்யவில்லை.

முன்னர் கூறியபடி சார்பெழுத்துக்களைப் பற்றி மாறுகொளக் கூறலாய் அமைதலோடு, அது விழுமிய பயன் என எதைக் குறிப்பிடுகின்றது என்று கூறவும் அப்பயனைத் தொல்காப்பியம் எப்படிப் பயந்தது என்று காட்டவும், நன்னூல் எப்படிப் பயக்கவில்லை என்று பகரவும் அக்கட்டுரை கருதாமையால் அக்கூற்றனைத்தும் பயனின்றி விளையாட்டாய் முடிதலை அறியலாம். அன்றியும் இச்சார்பெழுத்துக்களை நன்னூலார் தனியாகக் காட்டாவிடில், புதிதாய்க் கற்கப் புகும் மாணவன் குன்றுமுட்டிய குருவி போலவும், வலையிலகப்பட்ட மான்போலவும் மயங்குவான் என்று கருதி, அவனை அம்மயங்க வைத்தலில் இருந்து நீக்கவே தனித்துக் கூறினர் என்க. அப்படியாயின் இச்சார்பு எழுத்தின் விரிவு மாணக்கர்களை வருத்துகின்றதெனின், அம்மாணவமணிகள் நன்னூலார் போன்ற தமிழர் ஆகலின் தொன்னூற்கஞ்சித் தடுமாறுளத்தராகமாட்டார் எனத் துணிந்து கூறுக.

உயிரெழுத்தாயினுஞ் சரி, மெய்யெழுத்தாயினுஞ் சரி எல்லா எழுத்துக்களையும் மனத்தால் நினைக்கும்போது மாத்திரம் வாய்திறவாமல் நினைக்கலாமேயொழிய, எதிராளிக்குத் தாம் கூறிக் காட்டுங் காலத்து வாய் திறந்தே கூறவேண்டுதலின் மெய்த்தன்மையையுடைய ஆய்தம் அங்காத்தலில் தோன்றுது எனக் கொள்ளுதல் எப்படிப் பொருந்தும்! பொருத்தாக் கூற்றாக முடிவதோடு தும்மல் ஒலி போன்று ஆய்த ஒலி தலையில் பிறப்பதை யெப்படி மறுத்தல் இயலும் எனக் கேட்க நேரிடுகிறது.

தற்காலத்து ஒவ்வொரு துறையிலும் பல கட்சியினர் காணப்படுதல்போல, நன்னூலார் காலத்து இலக்கிய உலகத்தில் ஙகரம் மொழிக்கு முதலாகும் எனக் கூறும் ஒரு கட்சியினரும், ஙகரம் மொழிக்கு முதலாகாது எனக் கூறும் மற்றொரு கட்சியினரும் இருந்தனர். அவ்விரு சாராரையும் ஒன்பட்டால் உண்டு வாழ்வே என ஒன்றுபடுத்து தற்கே நல்னூலார் சுட்டு முதலிய எழுத்துக்களை ஙகர மெய் தனக்கு முன்னும் அகரத்தைத் தனக்குப் பின்னும் பற்றுக்கோடாக்கிக் கொண்டு தான் மொழிக்கு முதலாகும் என்றும், அவ்விரு மருங்குள்ள பற்றுக்கோடுகளைப் பெருக்கால் மொழி முதல் ஆகாது என்றும் "பிறர் தம் மதம் மேல் கொண்டு களைத"லாகக் கூறிய அதனைக் குற்றமாகக் காட்டினல் அறிஞருலகம் ஆதரிக்குமா? என்பது அறியத்தககது.

இனி பசு கருவீன்ற ஒன்றைப் பசுங்கன்று என்றும், ஆடு ஈன்ற ஒன்றை ஆட்டுக்குட்டி யென்றுங் கூறல் மரபு போல, அங்ஙனம் என்று கூறலே தொன்று தொட்ட மரபாகும் என்க. பசுங்குட்டி யென்றும், ஆட்டுக்கன்று யென்றுங் கூறல் மரபு வழுவாதல் போல, அங்கனம் என்றலும் அன்னணம் என்றலும் மரபு வழுவாமாற்றை அறிக.

கழக (சங்க) இலக்கியத்திற் காணப்படும் முறைக் கிணங்க, அவ்விலக்கியங் கண்ட தொல்காப்பியனர் யகரமெய் ஆவுடனும் ஒ வுடனுமே முதலாகும் என்றார். ஆனல் தொல்காப்பியர் காலத்துக்குப் பின்னல் வந்த இலக்கிய வழக்குப்படி அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ என்கிற ஆறோடும் யகரம் முதலாகும் என நன்னூலார் கூறுகிறார். இது தவறு? என்ற வினு எழுகிறது.

செம்மை, சிறுமை என்ற பண்புப் பெயர்களின் முடிபும் மூன்று காலங்களைக் காட்டும் இடைநிலைகளின் கொள்கையும் முந்தையோர் மரபுக்கு ஏற்ப இலக்கணஞ் செய்யப்பட்டமையால் நன்னூலார் கூற்று பொய்யாகாமல் மெய்யாகவே மிளிர்ந்து நிற்கும். ஆனல் அதை எதிர்க்கின்ற 'நன்னூல் நன்னூலா?' என்ற கட்டுரையின் கூற்று ஏற்ற ஆதாரமின்மையால் மரபு வழுவாகி மாயும் என்பதே அறிஞர் துணிபாய் அமையும்.

இடுகுறிப் பெயர், காரணப் பெயர், காரண இடுகுறிப் பெயர் என்ற இவற்றின் வேறுபாட்டைச் சூடாமணி நிகண்டு முதலிய பண்டைய நூல்களை ஓதியுணர்ந்தவர் மறுக்க முன்வரமாட்டார். ஆகலின் அவையும் நன்னூலார்மேல் பிழையில்லையென்று கூறுக.

'நன்னூல் நன்னூலா?' என்ற கட்டுரையானது, சியகங்கன் பவணந்தியாரிடம் "அரும்பொருள் ஐந்தையும் தருக" எனக் கேட்டிருக்க அதை மறந்தோ, அல்லது மறுத்தோ நன்னூலை "முண்டமே" எனக் கொண்டது ஒன்றும், பொருளதிகாரம் பெறேமே எனின் இவை பெற்றும் பெற்றிலேம் என ஒரு பாண்டியன் கவன்ற காலத்தில், தொல்காப்பியப் பொருளதிகாரம் எங்கே போயிற்று? எனக் கருதாமல் இறையனர் அகப்பொருளுரையின் கூற்றை நம்பிய மற்றொன்றும் வியப்பளிக்கும் விந்தையாக இருக்கக் காணலாம் அன்றோ?

தலைப்பு

முடிபு.—இதுவரையில் நாம் கண்டஆராய்ச்சியால், பவணந்தியடிகளார் தம் இலக்கணத்தில் எவ்விதத் தவறும் புரிந்திலர் என்பதை வெள்ளிடை மலையென விளங்க உணர்கின்றோம். ஆதலின் நாம் இனி நன்னூலில் எவ்வித ஐயமும் அடையாமல், அழகாக, ஆழமாக, ஆர்வமாக நன்னூல் நன்னூலே என்ற ஒரு தலைத் துணிவாகக் கொள்ளலாம் அன்றோ? ★

நண்பர்களே,

பணம் வருகிறது.
பறந்து போகிறது.
சம்பாதிக்க ஓடுகிறோம்.
சம்பாதிக்கிறோம்.
செலவழிக்கிறோம்.
அதில் ஒரு ரூபாய்...
இரண்டு ரூபாய்...
ஐந்து ரூபாய்...
தமிழையே கற்று
தமிழுக்கே உழைத்து
தமிழ் வடிவில் இயங்கி,
கொள்கைபற்றுக் கொண்டு
தடியடிகளைத் தாங்கி,
வறுமையில் அவதிப்படும்
மாபெரும் புலவருக்குத்
தரக்கூடாதா?
அண்ணு பொருளாளர்
நாவலர் செயலாளர்
விழாக்குழு உருவாகிறது.
உயிருள்ளபோதே மரியாதை.
உங்கள் பங்கு?
மனமிருந்தால் வழியுண்டு;
மனம் இருக்கிறதா?
செயல்படுத்துங்கள்.

நிதி அனுப்ப முகவரி:

சி. என். அண்ணுதுரை,
'அறிவகம்'
24. சூரியநாராயண செட்டி தெரு,
சென்னை-13.

கேள்விப்பெட்டி

பன்மொழிப்புலவர் பதில் தருகிறர்

நன்மாறன், சென்னை-10.

சிறந்த நாடகாசிரியர் இளங்கோவா, சேக்சுப்பியரா ?

சேக்சுப்பியரின் ஆற்றலை உலகம், அதிலும் சிறப்பாக அவர் தாயகமாகிய இங்கிலாந்து 17, 18ம் நூற்ருண்டுகளில் உணரவில்லை. 19ம் நூற்ருண்டில் உணர்ந்தது, அதுவும் ஜெர்மானியக் கலைப் பேராராய்ச்சியாளர் காட்டவே அறிந்தது. இப்போது மீண்டும் சேக்சுப்பியரை உணரும் பண்பு குறைந்து வருகிறது. இது சேக்சுப்பியரின் குற்றமல்ல, உலகின் குற்றம், காலத்தின் குற்றம், உணரும் காலம் வருவதுவரை, அவ்வளர்ச்சி சென்றெட்டும் வரை, அது குற்றம் என்பது கூடத் தெரியவருவதில்லை.

19ம் நூற்ருண்டுவரை சேக்சுப்பியர் உணரட்படாமலிருந்தது கூட வியப்பன்று. 20ம் நூற்ருண்டில் மீண்டும் உணர்வு நலிவானேன்? இதை உணர்ந்தால் இலக்கிய வளர்ச்சி பற்றிய ஒரு உயிர் மறை விளக்கம் பெறும்.

சேக்சுப்பியரின் கவிதையாழில் அவர் புலமை இழைந்தது. ஆனல் அவர் தனிச்சிறப்பை அவர் காலம் காணவில்லை. ஏனென்றல் கிட்டத்தட்ட அவரை ஒத்த கவிஞர்கள் நிரம்பிய காலம் அது. தமிழ்ப் பழமொழிப்படி, கவிஞன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் காலம் அது. சேக்சுப்பியரைவிட அறிவிற் சிறந்த புலமைக் கவிஞர்கள் இருந்தனர்-அவரைவிடச் சொல்லழகுமிக்க கவிஞர்கள் இருந்தனர். அவருக்குப் பிற்பட்ட 17, 18ம் நூற்ருண்டுக் காலம் புலமைக்கவிதையையேபோற்றிற்று. சேக்சுப்பியர் அறிவில் குறைந்த, செப்பனிடப்படா வைரம் என்று கருதப்பட்டார். கலை வேறு, அறிவு வேறு என்று கண்ட 19ம நூற்ருண்டுதான் அவரை கலை முழுதுற நிரம்பிய மக்கட் கவிஞர், முழுநிறைக் கவிஞர், கவிதைத் தெய்வம், தெய்வீகக் கவிஞர் என்று போற்றிற்று.

19ம் நூற்ருண்டு வரை அறிவும் கலையும் அதற்குரிய ஒரு சிறு குழுவினுள் அடங்கியிருந்தது. அவ்வுயர்குழு சேக்சுப்பியர் பெருமையை அறிய இருநூறு ஆண்டு சென்றது. ஆனல் அறிவு மக்களைப் பொதுமக்களிடையேயிருந்து, பொதுமக்கட் சார்பான புதிய அறிஞர், கலைஞர் தோன்றியதும், இப்பெரும் பரப்பு சேக்சுப்பியரை அறியப் பின்னும் நாட்செல்லவேண்டியதாகியுள்ளது. இன்னும் இரண்டு மூன்று நூற்ருண்டுகள் சென்றபின் சேக்சுப்பியர் புகழ் புதிதாக வளரக்கூடும் என்று நம்பலாம்.

இருநூறு ஆண்டுகளாக அங்கிலக் கவிஞன் சேக்சுப்பியருக்கு இங்கிலாந்திலும் உலகிலும் இருந்த நிலையும், அதன்பின் 20ம் நூற்ருண்டில் மீண்டும் தொடங்கியுள்ள நிலையும் இரண்டுமே சங்க இலக்கியத்துக்கும் சிலப்பதிகார மணிமேகலை காவியத்துக்கும் தொல்காப்பியத்துக்கும் சென்ற இரண்டாயிர மூவாயிர ஆண்டுகளாக இருந்து வருகிறது. 17-18ம் நூற்ருண்டுகளில் சேக்சுப்பியரை மக்கள் பொதுவாகப் போற்றியதுபோல் நாம் ஒரு நூற்ருண்டாகச் சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் ஆகியவற்றைப் போற்றத் தொடங்கியிருக்கிறேம். ஆனல் அவற்றின் தனிச் சிறப்பும் முழுச் சிறப்பும் உணர, தமிழகத்தில் மட்டுமல்ல, உலகிலேயே ஒரு பெரும் புதுமலர்ச்சி தோற்றியாக வேண்டும்.

மொழிக்கு மொழி, காலத்துக்குக் காலம், கவிஞனுக்குக் கவிஞன் ஒப்புமை நோக்கி ஒற்றுமை வேற்றுமை, உயர்வு தாழ்வு கூடக் காணும் பழக்கம் அறிஞருக்கு உண்டு, இருப்பதுஇயல்பு, இருத்தல் வேண்டும். ஆனல் இது எப்போதும் நற்பழக்கமுமன்று. எப்போதும் தீயபழக்கமுமன்று. ஒவ்வொரு நாட்டுக்கும் மொழிக்கும் அதனதன் இலக்கியம் ஈடும் இணையும் அற்றது. ஒவ்வொன்றுக்கும் தனிச் சிறப்பு பின்பற்றமுடியாத, போட்டியிட முடியாத தனிச் சிறப்பு உண்டு. அதே சமயம் ஒப்பிட்டு உயர்வு தாழ்வு கூறக்கூடிய, பொதுமை சிறப்புக் காட்டக்கூடிய, பின்பற்றக்கூடிய பகுதியும் உண்டு. மனிதருக்குக் கோயில், எறும்புக்குப் புற்று-இவற்றில் இன உயர்வு தாழ்வு உண்டு. கலை உயர்வு தாழ்வு கிடையாது.

சேக்சுப்பியருக்கும் இளங்கோவுக்கும், கம்பருக்கும் சங்க இலக்கியத்துக்கும் உரிய ஒப்புமை இலக்கியத்துக்கு இலக்கியம், கலைக்குக் கலை சார்ந்த ஒப்புமை அன்று. இனம் சார்ந்த ஒப்புமை. சேக்சுப்பியரின் பெருமை, கம்பரின் பெருமை, காளிதாசனின் பெருமை-இவை யாவும் தூக்கணங்குருவிக்கூடு, எறும்புப்புற்று, தேன்கூடு ஆகியவற்றின் பெருமை. அவை அவ்வவ்வினத்துக்குரியன, அவற்றின் உயிர்ப் படைப்புக்கள், தமிழன் புன்முறுவலுடன் வியந்து பாராட்ட, பின்பற்றக்கூடத்தக்கவைகளே. அவற்றின் உயிர் வளம் அதன் கலை வளத்தை ஒரு சிறிது ஊக்க, உயர்த்தக் கூட உதவும். பறவைகளின் இறக்கைகளை ஓரளவு பின்பற்றி வானூர்தி இறக்கைகள் அமைவுற்றலும், பறவை யிறக்கைகளவ்வளவு உயிரியக்கம் வானூர்திகளுக்கோ, வானூர்தி இறக்கைகளின் உயிர்க் கலை வளர்ச்சி பறவைகளுக்கோ இருக்கமுடியாது. தமிழன் இவற்றைப் போற்றக்கடவன், பழந் தமிழ் உயர்வை உணர இவை உதவுமாயின், உதவுமளவில், பின்பற்றக்கடவன்.

ஆனல் சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் இன்றிருக்கும் கலை யுலக இனத்துக்கு எட்டாத உயர்விலுள்ள ஒரு கலையுலக இனம் சார்ந்தது. அந்த இனக் கலையின் உயிர்ப் பண்பை உணர்ந்தபின்பே இன்றைய உலகம் அவற்றின் கலைப் பண்பை மதிப்பிட்டுணரமுடியும. சேக்சுப்பியர் கலைத் திறம் பெரிது. ஆனல் அது ஆங்கில இனம் எட்டிப் பிடித்த உயர் முகடு. கம்பன் கலைத் திறமும் அப்படியே, அது இடைக்கால வீழ்ச்சியுற்ற தமிழகம் எட்டிப் பிடித்த உயர் மேடு. ஆனல் இவை புற்றுக்கள், பழந் தமிழன் கலை கோபுரங்கள். ஆல்ப்ஸ் மலையின் உச்சியின் உயரம் இமயமலையின் அடித்தள உயரமாக இயங்குவதுபோல, சேக்சுப்பியர், தாந்தே, காளிதாசன், கம்பன் மோடுகளுக்குப் பால், கிரேக்கர் சென்றெட்டிய கலை முகடுகள்கூட அடி நிலம் எண்ணும்படி உயர் நிலத்தமைந்தவை சங்க இலக்கியங்கள். அந்தத் திபெத்துப் பீட பூமி மீது எழுந்துள்ள இமயம், அதன் மீது எழுந்துள்ள எவரெஸ்ட் கொடுமுடி சிலப்பதிகாரம்!

அதை உலகம் உணர வைக்க தமிழர் உலகைப் பின்பற்றி உணர வைக்க ஒரு முழு மறுமலர்ச்சியியக்கம், தமிழக மறுமலர்ச்சியியக்கமட்டுமல்ல, ஓர் உலக மறு மலர்ச்சி இயக்கம் தேவை. ★

வருமா இந்தி? பார்ப்போம் ஒரு கை!

அவர் :

"ஆட்சி மொழியாக இந்தியைத் திணிப்பதானது நிரந்தரமான அநீதி இழைக்கும் கொடியசெயலாகும்: அதனை நாம் சகித்துக்கொண்டிருக்க முடியாது.

"இந்தி நமது விருப்பத்திற்கு மாருக நம் மீது திணிக்கப்படுமானுல் நாம் நமது சக்தி முழுவதையும் திரட்டி அதை எதிர்க்கவேண்டும்."

தாம்பரம் கிறிஸ்துவக் கல்லூரி மாணவர்களிடை பேசிய ஆச்சாரியார், 'மாணவர்களும் இந்தியை எதிர்க்க வேண்டும்; ஆனுல், அதற்காக அரசியல்வாதிகளைப்போல ஆகிவிடக்கூடாது' என்றும் கேட்டுக்கொண்டு அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"இந்தி எனக்குத் தெரிந்திருக்குமானுல், இங்கு உங்களிடம் பேசுவதைக் காட்டிலும் டில்லியில் போய் பொதுக் கூட்டம் போட்டு, பேசுவேன்; 'இந்தி மொழியின் ஆதிக்கம் கூடாது' என்று இந்தியிலேயே எடுத்துரைப்பேன்.

"நான் அண்டை மக்களுடன் உறவு கொண்டு வாழ, அந்த மக்களின் மொழியை நாம் விரும்பிக் கற்கலாம்; ஒரு மொழியை விரும்பிக் கற்பதற்கும், அதன் ஆதிக்கத்தை ஏற்பதற்கும் அதிக வேறுபாடு உண்டு.

"நான் முன்பு இந்தி மொழி பற்றிக் கூறியதற்கும் இப்போது கூறுவதற்கும் முரண்பாடு இருப்பதாகவும், முன்னுக்குப்பின் முரணுக நான் பேசுவதாகவும் சிலர் என் மீது குற்றஞ் சாட்டுகின்றனர். என்னைப் பொறுத்தவரையில் நான் முரண்படப் பேசவில்லை. 40 ஆண்டுகளுக்கு முன்புகூட நான், நமது மாநில மக்கள் இந்தியைக் கற்கவேண்டுமென்று கூறினேனே தவிர, ஆட்சி மொழியாக இந்தியை ஏற்கவேண்டும் என்று கூறவில்லை. (பலத்த கையொலி).

"அப்படியே நான் தவறு செய்ததாக வைத்துக்கொண்டாலும், 40 ஆண்டுகளுக்கு முன் நான் ஒரு தவறு செய்திருந்தால், இன்று அதனைத் திருத்திக் கொள்ளக்கூடாதா? தொடர்ந்து அந்தத் தவறினைச் செய்ய வேண்டுமா?

"நான், 'இந்தி கற்றுக்கொள்ளுங்கள்' என்று முன்பு கூறினேன்; மக்கள் கேட்கவில்லை.

"நான் முன்பு ஒன்றைக் கூறி அதை மக்கள் கேட்காமல் விடுத்தவர் என்பதால், இப்போது மக்கள் வருந்த வேண்டுமா?

"எனக்கு மக்கள் மீதுள்ள அன்பைக் காட்டிலும் எனது வாதத்தின் மீதுள்ள அன்பு பெரிதல்ல. (பலத்த கையொலி)

"40 ஆண்டுகளுக்கு முன் நாம் எத்தகைய அரசியல் அமைப்பின் கீழ் வாழவேண்டிவரும் என்ற தெளிவு இருக்கவில்லை; ஆனுல் இன்று நிலைமை தெளிவானதாகி விட்டது. நாம் இப்போது ஒரு பெடரல் ஆட்சி முறையை வைத்துக்கொண்டிருக்கிருேம். இந்த நிலையில் இந்தியை ஆட்சிமொழி ஆக்குவதினுல், பலவகையிலும் இந்தி பேசாத மக்கள் நிரந்தரமாகப் பின்தங்கிய நிலையிலேயே—பிரதிகூலமான நிலையிலேயே இருப்பர். இது மிகப் பெரிய அநீதியாகும். இதை நாம் ஏற்கக் கூடாது; ஏற்க முடியாது.

"என்றுமே உலகில் அநீதிகள் அளவு மீறிப் போகுமானுல் அவை அனுபவ சாத்தியமற்றவையாகிவிடும்; வடக்கே வாழ்பவர்கள் விரும்புவதுபோல, இந்தியை நம்மீது ஒருநாளும் திணிக்க முடியாது.

"ஆங்கிலத்தைத் திணிப்பதற்காக பிரிட்டிஷார் செய்ததைப் போல நம்மை ஒரு 200 ஆண்டுக் காலத்திற்கு அடக்கி ஒடுக்கி வைத்திருந்தாலன்றி நாம் இந்தி கற்றுக் கொள்ளவது என்பது முடியாத காரியம்.

"இந்தி ஆட்சிமொழி ஆக்கப்பட்டால் எலலாத் துறைகளிலும் அன்று ஆங்கிலேயர் முதலிடம் பெற்றதைப்போல, இந்திமொழிக்காரர்களே ஆதிக்கம் வகிக்க நேரிடும்.

ஆங்கிலேயர் மீதிருந்த நமது கோபம் பறந்துவிட்டது; ஆனுல் நாம் கற்ற ஆங்கிலம் நம்முடன் இருந்துவிட்டது. ஆங்கிலம் ஒரு சொத்து அல்ல, அவர்கள் நம்மிடமிருந்து பறித்துக்கொள்ள—அல்லது நாம் அதை இழந்துவிட—அது ஒன்றும் வெள்ளையரின் பாட்டன் வீட்டுச் சொத்துமல்ல!

"வெள்ளையர்கள் நமக்குத் தந்த இரயில்வேயையும், தந்தியையும் நாம் வைத்துக்கொள்ளவில்லையா?

"அதேபோல ஆங்கிலம் நமக்குக் கிடைத்துள்ள அரிய சொத்து; அதனை நாம் இழப்பதற்கில்லை!

"ஆங்கிலம் இன்று வசிக்கும் இடத்திலிருந்து அதனைக் கீழிறக்கிவிட்டு அந்த இடத்தில் இந்தியைப் புகுத்துவதானது, சிந்திக்க முடியாதவர்களின் செய்கை என்பதுடன், முட்டாள்தனமானதுமாகும்."

-ஆச்சாரியார்.—11-10-57

நாம் :

"இந்த நாட்டு அரசியலில் நம்முடைய சார்பாக - நம்முடைய பிரதிநிதிகள்-நம்முடைய தலைவர்கள் என்று டில்லி 'யாத்திரை' போய்வந்தவர்கள் நமது நாட்டைக் காட்டிக்கொடுத்துவிட்டார்கள் என்பதை உணர்ந்து கொண்டோம்; இனி நாம், இவர்களின் வாயிலாக அல்ல - நேரடியாகவே 'நாம் யார்' என்பதை வடநாட்டவருக்குக் காட்டவேண்டிய காலம் வந்திருக்கிறது-காட்டவேண்டும்.

"இன்னும் 90 நாட்களிலே டில்லி மக்கள் சபையில், இந்தி பற்றி அலசிப் பார்த்து-ஆராய்ச்சி செய்து சிபாரிசு செய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கின்ற 'உப-கமிட்டி' தன்னுடைய தீர்ப்பை வழங்கப்போகிறது; அந்தத் தீர்ப்பு எப்படியிருக்கும் என்பது இன்றைக்கே நமக்குத் தெரியும். அந்தத் தீர்ப்பைச் சொல்லுவதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற 'கண்துடைப்புக் கமிட்டி'யில் பெரும்பான்மையினராக உள்ளவர்கள் இந்தி மொழி வெறியர்கள்தான்; அவர்கள் என்ன சிபாரிசு செய்வார்கள் என்பது நமக்கு நன்ருகத் தெரியும்; நாட்களுக்காகக் காத்திருப்போம்.

"இதை மனதிலே கொண்டுதான் இன்றைய தினம் முன்னேற்றக் கழகம் இந்த இந்தி எதிர்ப்பு நாளை ஏற்பாடு செய்திருக்கிறது-வெறும் விழாக் கொண்டாடுவதற்கல்ல; மாலைகளைப் பரிமாறிக் கொள்வதற்கல்ல; ஒருவரைப் பார்த்து ஒருவர் 'நலமா?' என்று கேட்டுக்கொள்வதற்கல்ல; 90 நாட்களுக்குப் பிறகு, 'நீ எந்தக் களத்திலே இருக்கப்போகிருய்-நான் எந்தக் களத்திலே போக?' - என்று கேட்பதற்கு, இன்றைக்கு நாம் - தமிழர்கள் அத்தனைப்பேரும் கூடியிருக்கிருேம்.

"பல நண்பர்கள் கருதிக்கொண்டிருக்கிருர்கள்; கனவு கண்டு கொண்டிருக்கிருர்கள்-'தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலே போராட்டம் நடத்துவதற்கு ஆற்றல் படைத்த திராவிட முன்னேற்றக் கழகம், சட்டசபையிலேயும்-டில்லி மக்கள் சபையிலேயும் காலடி எடுத்துவைத்திருக்கிறது; ஆகவே, இவர்கள் அந்த நாற்காலி சுகத்திலே சொக்கிப் போய், மறுபடியும் இவர்கள் தங்கள் போர்க் குணத்தைக் காட்டமாட்டார்கள்' என்று!

"நாம் எங்கு நடமாடினுலும் - டெல்லி தர்பாரிலே நடமாடினுலும் - சென்னைக் கோட்டையிலே உலவினுலும் இந்த நாட்டு மக்களுக்காக உலவிக்கொண்டிருக்கிருேம்; எந்த நேரத்தில் எங்கிருக்க வேண்டும் - என்ன செய்யவேண்டும் என்பது நமக்குத் தெரியும். இந்த நாட்டு மக்களுடைய உள்ளம் என்ன? இந்த மக்களுடைய உரிமைகள் யாவை?- என்பவைகளைப் பற்றியே எண்ணுகின்ற கட்சி திராவிட முன்னேற்றக் கழகமாகும்.

"அண்ணு அவர்கள் திருவண்ணுமலை மாநாட்டிலே குறிப்பிட்டார்கள்- 'எங்களுக்கிருக்கின்ற எசமானர்கள் இரண்டு பேர்; ஒருவர்-எங்களுடைய உள்ளம்; மற்ருெருவர்-இந்த நாட்டு மக்கள்'-என்று! இந்த இரண்டு எசமானர்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டவர்கள்; ஆகவே, இருக்கின்ற இடம் என்ன என்று பார்த்துக்கொண்டிருப்பவர்கள் அல்ல-உரிமைப் போராட்டத்திலே எந்தக் கட்டத்தை வந்து அடைந்திருக்கின்ருேம் என்பதையே கணக்கிட்டுக்கொண்டு வாழுகின்ற இலட்சிய வீரர்கள்-கடமை வீரர்கள்தான் முன்னேற்றக் கழகத்திலே இருக்கிருர்கள்.

"இந்தப் பதவிகளை உதறி எறிந்துவிட்டு, எந்த நேரத்திலேயும் சிறைக்கம்பிகளுக்குப் பின்னுலே உட்காருவதற்கோ - துப்பாக்கிக் குண்டுகளுக்கு மார்புகாட்டி நிற்பதற்கோ நாம் தயங்கமாட்டோம்; யாராவது வீண் கனவு கண்டு கொண்டிருந்தால், அவர்களுக்கு இன்றைக்கே நான் எச்சரிக்கை செய்கிறேன்-'அப்படித் தப்புக் கணக்குப் போட்டு குழியிலே விழாதீர்கள்'-என்று!

"இந்தச் சர்க்கார், உள்ளபடியே இந்த நாட்டு மக்களுடைய உயிர்களுக்கும் - இந்த நாட்டு மக்களுடைய இரத்தத்திற்கும் மதிப்பளிக்கின்ற சர்க்காராயிருந்தால், இந்தி விஷயத்திலே தயவு செய்து எச்சரிக்கையோடு நடந்துகொள்ளவேணடும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்; அல்லது இந்தச் சர்க்கார் இரத்த வெறிகொண்டு அலையும் ஓநாய்களின் கூட்டத்தைச் சார்ந்தவர்களாய் இருந்து, எப்படியும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை, இந்த நாட்டு மக்களுக்கு 'இரத்தக் குளிப்பு'த் தர வேண்டுமென்ற வெறிபிடித்தவர்களாய் இருந்தால் தாராளமாக இந்தியோடு வாருங்கள்; எங்களிடத்திலே ஏராளமான இரத்தம் இருக்கிறது.

"நவீன அரசியலும், சனநாயகப் பாடங்களும் இந்த நாட்டு மனிதனை மரக்கட்டையாக்கிவிடவில்லை; மனித உணர்ச்சிகள் அப்படியே இருக்கின்றன. அந்த மனித உணர்ச்சியை சாகடித்துவிட்டு எவனுக்கும் சனநாயகம் தேவையில்லை. அந்த மனித உணர்ச்சியும் - மான உணர்ச்சியும் போய் இந்த நாட்டிலே எவனும் அரசியல் மேதையாய் உலவ வேண்டிய அவசியமில்லை. அத்தனையும் நம்முடைய உணர்ச்சிகளுக்கு - நம்முடைய உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்கு கையிலே கிடைத்திருக்கிற சாதனங்களே தவிர, அந்த உணர்ச்சிகளைச் சாகடிப்பதற்காக நாம் தேடிக்கொண்ட வம்புகள் அல்ல-ஓமன்கள் அல்ல என்று, அந்த நண்பர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்."

-ஈ. வெ. கி. சம்பத்.—13-10-57

நோயும் மருந்தும்!

கண்ணால் 'அவனை' நோக்கிக் களவு கொண்டு, பின்னொரு நாள் கனி உதட்டில் முத்தமும் முடித்து, இன்னாள் 'அயலான்' போல், 'அவளை' இருக்கவைத்தாள்...!

அகத்தே காதலினை அடக்கிவைத்து, முகத்திலே அயலார் போல் பார்வை பார்த்து. கால் நகத்திலே நிலத்தைக் கிறி - நாணி நின்றாள்! கண்களோடு கண்கள் பேசியபின், வாய்ச்சொற்கள் எதற்கு என்று, கொழுவோடு கொடிபோல், அவனோடு தழுவி நின்றாள். 'அவனை'த்தான் இன்று கண் பழுதோடு வாழுகின்ற குருடனுக்கிப் போட்டாள். போனாள்.

⁂ ⁂ ⁂

பட்டுக்கரு நீலப்புடவைதனில் பதித்த நல்வைரம்போல்-நட்ட நடுநிசியில் நடக்குதுதான் வட்டநிலா போகின்ற நிலவும் - பூ மணத்தை வாரி வருகின்ற தென்றலும், காதலால் சாகின்ற அவனை மேலும் கொல்லுகிறது. என் செய்வான்...?

திண்ணையில் உடலினைச் சாய்த்து, தோட்டத் தென்னை மரந்தன்னில் விழிவைத்து கண்மூடித் துயில முயலுகிறான். பெண்மானின் கண்ணுடையாள் பெருவில்லின் புருவமுடையாள், வெண்மயிலின் கழுத்துடையாள், அன்னவளின் அழகு தான் அப்போதும் அவன் நினைவுக்கு வருகிறது...

சாயாத அவளின் கொங்கைமேல் இட்ட ஆடை - யானையின் மேல் முகபடாம் வேயாத காட்சிபோல் தெரிகிறது.

வாள் ஒலிக்கு களத்திலே அஞ்சாத தன் வலிமை-அவளின் கால் ஒலிச்சிலம்பிற்கு வளைந்துவிட்ட வியப்பு மேலும் அவனை வருத்துகிறது. அறிஞர் தம் ஏட்டைப் படிக்க படிக்க வரும் இன்பம், 'அவளின்' பனிஉதட்டை உறிஞ்சுந்தோறும் பிறந்ததுபோல உணருகிறான். 'தாமரைக்கண்ணன்' உலகத்திலே, தங்கக்கட்டில் - பட்டுவிரித்த தரை—எங்கும் கொட்டி பரப்பிய முல்லை - வட்டிலில் பழமெடுத்து வரும் வனிதை திலோத்தமா தொட்டிலுக்குப் போகாத கட்டழகி ஊர்வசி — அம்பை நிகர்மொழியாள், ஆடி வந்து தெம்பை தரும் ரம்பை. இந்திரலோகமா! சுந்தரபோகமா!! எனச் சொல்லுவார்களே, அது மயில்போன்ற அவளின் தோளில் துயில்வதற்கு துளியேனும் ஈடன்று என்று, அவன் ஏங்குகிறான். கண் திறந்தான். அவனெதிரே அனிச்சமலர்கள் ஆடுகிறது.

"அனிச்சமலரே! நீ ஏன் ஆடுகிறாய்? நீ அவளின் பாதத்தைவிட அணுவேனும் மென்மையல்ல! அறிந்துகொள்" என்கிறான். மூங்கிலே! நீ ஏன் முகம் தூக்கி நிற்கிறாய்? 'அவளின்' தோள் உன்னிலும் கோடி தங்க நிறைமுடையது முன்னம் இதை உணரு என்கிறான்.

"தென்றலே! நீ ஏன் வந்து என்னைத் தீண்டுகிறாய்? ஆயிரம் மலர்களிடமிருந்து அள்ளி வந்தாய் மணத்தை அறிவேன். 'அவள்' கூந்தலுக்கு நறுமண எண்ணெய் இடுவதில்லை. ஆனால் குளிர்மணத்திற்கோ குறைவில்லை. குறித்துக்கொள்" என்கிறான்.

"நிலவே! நீ ஏன் நிற்கிறாய். நீ குறைவாய் நிறைவாய். அவள் முகம் என்றும் நிறையான செல்வம். நெஞ்சல் நிறுத்து நட!" என்கிறான். மீண்டும் கண்மூடிச் சாய்கிறான்.

⁂ ⁂ ⁂

அவள்?

ஒளி எழுப்பி அவன் தோள்சேர்ந்த கைகள் இப்போது வளையலும் சுழல வலிமை இழந்து மெலிந்தது கண்டு வருந்துகிறாள். நெருப்பு தொட்டால்தான் சுடும். காமம் நினைத்த அளவிலா சுடவேண்டும்! என்று நெஞ்சம் புலம்புகிறாள்.

நுரையோடு வரும் கடலலைபோல், நெஞ்சில் வரும் ஆசை நிறைகளை, பிறர் அறியாமல் மறைக்கிறாள். இறைக்கின்ற கிணறுபோல் இப்போதுதான் வேதனை இன்னும் பெருகிறது. என் செய்வேன்? என்று ஏங்குகிறாள். எழுந்தாள். நடந்தாள்.

⁂ ⁂ ⁂

ஆற்றோரம்-'அவன்' வருவதை அவள் பார்த்தாள்! 'அத்தான்' என்றாள். திரும்பினான்.

"தூங்கவில்லையா நீங்கள்?"

"இல்லை! கண்ணே!"

"நோயா!"

"ஆமாம்!"

"மருந்து சாப்பிட்டீர்கள்?"

"மருந்தா? ஆய்மயிலே! பலநோய்க்கு மருந்து. வேறு பொருளாக உண்டு. ஆனால் இந்நோய்க்கு மருந்து அதுவேதான்!"

"புரியவில்லையே!"

"உன் இரு விழியால் என் இதயத்தில் காதல் நோய் ஏற்றினாய்! திருவே! அந்த நோய் நீதான். நோய்க்கு மருந்தும் நீ தான்!" என்றான்.

நெருங்கினாள் - விருந்தானாள்—ஆமாம்; மருந்தானாள்!

தன்னந்தனியே போய்க்கொண்டிருந்த 'தனிப்பெண்ணை' தங்க நிலவும் போய் தாளிட்டுக்கொண்டது, மேகத்திருளில்.

"பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்கு தானே மருந்து" (குறள் 1102)

—கோ. இறைமுடிமணி.

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

தலைவலியுமாகும் என்பதை அரசியல் வட்டாரம் நன்கறியும்.

நாட்டுக்கேற்ற திட்டங்கள் தீட்டி அந்த வகையோடு நிறைவேற்றும் நிர்வாகத் திறமை யாவது பண்டிதரிடம் இருக்கிறதா என்றால் இல்லை. ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டினார்கள். சர்வாதிகார நாடான ரஷ்யாவைப் பின்பற்றித் தீட்டினார்கள். ரஷ்யாவில் கட்டாய உழைப்பு உண்டு. அதனால் ரஷ்யாவின் திட்டம் நிறைவேறுகிறது. இங்கே நிலை என்ன? சர்க்கார் ஊழியர்களே வேலை நிறுத்தம் செய்யும் வகையில் ஆட்சியிருக்கிறது! எப்படி நிறைவேறும் இங்கே ஐந்தாண்டுத் திட்டம்?

பண்டிதரிடம் ராஜதந்திரம் உண்டா? அறவே இல்லை. எந்தக் காரியத்தை சாதுர்யமாக-வெற்றிகரமாக முடித்திருக்கிறார்? ஒரு சார்பில் நின்று மற்றொரு சார்பாரைத் திட்டிக் குவித்தது தான் நேருவின் வாழ்வில் அதிகமே தவிர, இரண்டு சாராரும் ஏற்கும் நீதியை இதுவரை எந்தத் தகராறிலும் நேரு சொன்னதில்லை.

ஆதிக்கப் போட்டியை ஒழிக்க நினைக்கிறார் நேரு! உலகத்தில் யார் ஆதிக்கப் போட்டியில் சம்பந்தப்படாமலிருக்கிறார்கள்! ஆற்றல் பெற்ற கடவுள்களின் கதைகளில் கூட ஆதிக்கப் போட்டி நடைபெற்றதாக இதிகாசங்கள் கூறுகின்றன! 'சாதாரண மனிதப் பிறவிகள் அந்த ஆசையிலிருந்து மீளமுடியுமா? பண்டிதர்தான் அதை விட்டுவிட்டாரா? திராவிடத்தை நசுக்குவதும், நாகர்களை அடக்குவதும், இந்தியைப் புகுத்துவதும் ஆதிக்கம் இல்லையா?

பண்டிதரின் கல்வியறிவு பற்றி நாம் சந்தேகிக்கவில்லை. சரித்திரத்தில் அவரைப் பேராசிரியரெனலாம். அரசியலுக்கான யூகம் குறைவு. எந்தச் சிக்கலிலும் அவர் அபரிமிதமான உண்மையை எடுத்துரைத்ததில்லை. உலக ஜனநாயகத்தின் கூட்டமைப்பில் தனக்குக் கிடைத்த அரிய வாய்ப்புகளையெல்லாம் நழுவ விடவில்லையே தவிர, அந்த வாய்ப்புகளைப்பெற்றதற்கான பயனை நேருவோ, இந்தியாவோ இதுவரை பெற்றதாகத் தெரியவில்லை.

எந்தத் துறையிலும், சாதாரண மனிதனுக்கு இருக்கும் ஆற்றலை மட்டும பெற்றிருக்கும் அவரைப் பார்க்க உலக நாடுகளில் ஆள் சேருகிறதே ஏன்? ஆத்மீகத்தையே நம்பி 'நித்தியகண்டம் பூரண ஆயுளாக' செத்துச் செத்துப் பிழைக்கும் இந்தியத் துணைக்கண்டத்தில் ஒரு நவநாகரிகமான மனிதரை — சிறுவர்களுடன் விளையாடும் வாலிபக் கிழவரை — பார்ப்பது என்பது வெளிநாட்டுக்காரர்களுக்கு ஒரு புதுமை இல்லையா? பண்டிதர் பிறந்தது காஷ்மீர் தானே தவிர உள்ளபடியே அவர் ஐரோப்பியர் தானே! அவர் பிறந்த பகுதியின் பண்பாட்டை இதுவரை அவர் பின்பற்றியதே இல்லை. ஐரோப்பிய இந்தியராகவே இருக்கிறார்; வாழ்கிறார். பிரதம மந்திரி என்ற பதவி அவருக்கு 'கௌரவ உத்தியோகமாக'வே இருக்கிறது. ஆனால் இந்தத் துணைக்கண்டத்திலே வதியும் அப்பாவிகள், 'எங்கள் நேரு மகாமேரு' என்கிறார்கள். வெளிநாட்டு வரவேற்பைக் காட்டி உள்நாட்டு அதிருப்தியை தீர்த்துக்கொள்கிறவர்தான் நேரு என்று யாருக்குத் தெரியும்? சீசர் எப்படி வாழ்ந்தான்? தாயகத்தில் வெறுப்பு வளர்ந்தால் திடீரென்று வேறு நாட்டின் மீது படையெடுப்பான். வெற்றி கொள்வான். திரும்புகையால் தாய்நாடு வரவேற்பு அளிக்கும்! வெறுப்பை மறக்கும்! அந்த வெளிச்சத்தில் சீசர் கவலையை மறந்து வாழ்ந்தான். உலக வரலாற்றில், மக்கள், தங்கள் மத்தியிலிருந்து உயர்ந்த ஒருவனிடமிருந்து தான் பலன்களை அடைந்திருக்கிறார்கள். பிறக்கும்போதே உயர்ந்த அந்தஸ்திலிருந்து, அந்தப் பளபளப்பிலே ஆட்களை விலகிக்கொள்ளச் சொல்லி விட்டு முன்னுக்கு வந்தவனிடம் யாரும் இதுவரை பயனை அடைந்தது இல்லை.

—தென்னரசு

அடுத்த இதழில்

கண்ணதாசன்

எழுதும்

'வாழ்க்கையில் வந்த நண்பர்கள்'

ஆரம்பமாகிறது!

வெண்பாப் போட்டி-6.

<u>ஊட</u>ல் வெண்பா

அகத்துறையில், ஊடல் முறைப்படி விருப்பம்போல் எழுதலாம். ஊடல், ஒரு நாடகம்போல் அமைதல் வேண்டும். விரும்பினால், வெண்பாவின் கடைசி இரு வரிகளாக, ஒரு திருக்குறளையே முழுக்க எடுத்தாளலாம். (திருக்குறள் சோமேசர் வெண்பாவைப்போல). தேர்ந்தெடுக்கப்படும் வெண்பாக்கள் தொடர்ந்து நான்கு இதழ்களில் வெளிவரும்.

முடிவு தேதி 2-11-57.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

மனிதன் ஆனந்தத்தை அளவுக்கு மேல் கற்பனை செய்வதால், வாழ்வின் தடம் மாறும்போது அதிர்ச்சியைத் தாங்கஅவனால் முடிவதில்லை. சூனியமாகக் கிடந்த அவன் சிந்தனையிலே, சுகம் தரும் மெல்லிய பூங்காற்றாக விளங்கினாள் கனகம். அந்த நிறைவு மட்டும் குறையத் துவங்கினால், அவனது நிலை எப்படியாகிவிடும்!...கனகத்தின் வரவை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து கிடந்த அவனது எண்ணங்களைச் சிதைத்துப் பிய்த்தெறியும் கொடிய கத்தியாக வந்து வாய்த்தது கனகத்தின் அடுத்த கடிதம். கற்பனைக் காற்று புகுந்து புகுந்து கொஞ்சங் கொஞ்சமாக ஊதிக்கொண்டிருந்த காதல் பலூன், திடீரென வெடித்து விட்டது. அஸ்திவாரமில்லாது கோட்டை கொத்தளங்களை எழுப்பிய அப்பாவி எழுத்தாளனால், இந்த அதிர்ச்சியை எப்படித் தாங்கிக் கொள்ள இயலும்! இத்துப்போயிருந்த பாலகுருவின் இதயத்திலே எண்ணமுடியாத ஓட்டைகளை ஏற்படுத்திவிட்டது அன்று வந்த கடித முள்...! முதல் கடிதத்தின்மூலம் பூத்த காதல் முல்லை, அடுத்த கடிதத்தால் வாடி வதங்க வைக்கப்பட்ட கோர நிலை!

'மதிப்புக்குரியவரே!

நான் போனதடவை அனுப்பிய கடிதத்துக்கும், இந்தக் கடிதத்துக்கும் எவ்வளவோ வேற்றுமை. மனித மனம் எதையெதையோ நினைத்துத் தாவுகிறது. ஆனால் எதிர்பாராத எவ்வளவோ ஏற்பட்டுவிடுகின்றன. களிப்பை வரவேற்கும் மனம், கவலையையும் தாங்கிக் கொள்ளும் சக்தியைப் பெற்றதாயிருக்கவேண்டும். அதுவே ஒரு மனத்தின் பக்குவத்தை உணர்த்துவதாகும்.

வாழ்க்கையில் எதிர்பாராத சம்பவங்கள் ஏற்படும்போது, இதயத்தைத் துவளவிடாது இன்னலைக் கண்டு அயராது, வாழ்வை இழுத்துச் செல்வதே மனித இனத்தின் ஒப்புயர்வற்றகலை. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சேர்ந்து சமைக்கும் சுருக்குப் பள்ளத்தாக்குகளால் நெஞ்சைச் சரியவிடாது சரிசெய்து கொள்ளவேண்டும் என்பதையெல்லாம், எழுத்தாளராகிய உங்களுக்கு எடுத்துச் சொல்லவா வேண்டும்! என்னுடைய கடிதத்தைத் தொடர்ந்து, என்னை எதிர்பார்த்திருப்பீர்கள். தஞ்சையிலிருந்த காந்தத்தை நோக்கி, எனது இதயம் நகர்ந்துகொண்டே இருந்தது. அன்றொருநாள், அத்தையின் வீட்டுக்கு வந்திருந்த நான், தங்களின் அறையை நோக்கி வந்தேன். அங்கேதான் சந்தர்ப்பம் சதிக்கூடம் அமைத்தது. காதல் கரங்களின் வருடலினால் களித்துக் கூத்தாடும் கருத்தைத் தாங்கி வந்த நான், தங்களின் அறைக்குள்ளே வந்ததும், வெட்கத்தால் தலைகுனிந்து கொண்டேன். மாதக் கணக்காக திடப்படுத்திக் கொண்ட மனம் மிரண்டது; ஆனால் மயங்கியது. பல பக்கங்களிலும் வர்ண விளக்குகளைப் பார்த்த சின்னஞ்சிறு பிள்ளை மயங்கி நிற்குமே, அதைப போன்ற பிரமை, இரண்டு கரங்கள் கன்னங்களை வருடியதும். பசுந்தழை எங்கிருந்தாலும் பயந்தோடுகிறதல்லவா? நான் நாரிலே கோர்த்த மலராகிவிட்டேன்.

நிமிர்ந்து நோக்கினேன் அந்த அறையை. 'அது யாருடைய படம்?' -சுவற்றிலே தொங்கிய படத்தைச் சுட்டிக்காட்டிக் கேட்டேன்.

'என் அருமை நண்பன் பாலகுருவின் படம்'-இந்த வார்த்தைகளை அவர் சொன்னபோது...விஷ நாக்குகளால் என் இருதயம் வளைத்து வளைத்துக் கொட்டப்பட்டது. வேதனையின் அமுக்கத்துக்கு அந்த ஒரு நிமிடத்தில் நான் தூக்கியெறியப்பட்டேன். நெஞ்சச் சுவரின் ஒவ்வொரு அணுவும் ஏமாற்றச் சாட்டையின் கொடும் அடியிலே சிக்கிக் கதறியது. அந்த நிலையிலே என் கண்கள் வடித்த கண்ணீர்க்கோடு - அது கன்னங்களிலே ஏற்படுத்திய சூடு, இவையே என் மனத்துயரத்தின் பிரதிபலிப்பு...அவரிடம்-தங்களின் நண்பர் பாண்டியனிடம்-உண்மையைக் கூறினேன். அவரும் வருத்தப்பட்டார். எவ்வளவு சிக்கிரம் என் இதயம் சென்ற பாதை திருப்பப்பட்டுவிட்டது! அப்புறம் எவ்வளவோ சிந்தனை செய்தேன். சிறகொடிந்த பறவை வேடனால் வளர்க்கப்படுவது நியாயம்தானே! எத்தனையோ கதைகளிலே பார்ப்போமே, என் உள்ளம் உங்களுக்குத்தான் சொந்தம், அழிந்துவிடும் இந்த உடல் எப்படிப் போனால் என்ன என்கிற தத்துவங்களையெல்லாம்...நான் அந்த நடைமுறைக்குதவாத தத்துவங்களையெல்லாம் தகர்த்தெறிய முடிவு செய்தேன். என் உள்ளத்தை உங்களுக்கே சொந்தமாக்கியிருந்தேன். சந்தர்ப்பம் என்னை உணர்ச்சிப் பள்ளத்திலே தள்ளிவிட்டது. எவரின் கையசைவிலே என் உணர்வு சுருண்டு விழுந்ததோ அவருக்கே உள்ளத்தையும் சொந்தமாக்கத் தீர்மானித்துவிட்டேன். அதன் பின்பு நானும் பாண்டியனும் எங்கள் உறவை வளர்த்துக் கொண்டோம். என்னுடைய தவறால் தோல்வியை அணைத்துக் கொண்ட உங்கள் நெஞ்சம், துவண்டு போகக்கூடாதென்பதே என் ஆசை. அச்சேறிக்கொண்டிருக்கும் எங்கள் மணவிழா அழைப்பை விரைவில் அனுப்பி வைக்கிறேன். நீங்கள் எங்களை வந்து வாழ்த்த வேண்டுமென வணக்கமுடன் அழைக்கிறேன்.

அன்புள்ள

கனகம்.'

இத்தனை நாட்களும் உள்ளத்திலே பெருகிக் குவிந்த உல்லாச உணர்ச்சிகளெல்லாம் ஊமையாகிவிட்டன. ஏ, காதலே! நீ ஏன் எழுத்தாளர்களின் உண்மை வாழ்விலே காதலெனும் தீபம் ஏற்றி வைக்கக் கூடாது?... ஒடிந்தவிட்ட பாலகுருவின் உள்ளத்தை ஒட்டவைக்க எந்த சக்தியாலும் முடியவில்லை. காதல், எட்டாத வானத்து நிலா; கைக்குக் கிட்டாத கனிக்கொத்து- இந்த முடிவுக்கு வந்த பாலகுருவின் பேனா, அன்றுமுதல் காதல் கதைகளிலே முறிவு ஏற்படுத்திப் பார்ப்பதிலேயே மகிழ்ச்சி பெறத் தொடங்கியது. ★

<u>உருவகம்</u>

தென்னையும் தொட்டாற்சுருங்கியும்

எப்பொழுதும் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும் அழகிய ஓடை ஒன்றின் கரையில், நீண்டு உயர்ந்த தென்னை மரம் ஒன்றும், ஒரு சின்னஞ்சிறு தொட்டாற்சுருங்கிச் செடியும் இருந்தன.

தொட்டாற்சுருங்கி, செடி என்றாலும் உருவில் கொடிபோல் அமைந்திருப்பதாகும். அது மேல் நோக்கி இல்லாமல், பக்கவாட்டிலேயே வளர்ச்சியடையும் தன்மையுடையது. ஆலமரத்தின் விழுதுகள் தரையைத் தொட்டு அங்கேயே வேர் ஊன்றிவிடுவதுபோல, தொட்டாற்சுருங்கியின் ஒவ்வொரு கிளையிலும் வேர் உண்டாகி, அவை தரையில் ஊன்றிக்கொள்ளும். அதனால் அதன் ஆரம்பப் பிறப்பிடம் எது, என்பதைக் கண்டுபிடிப்பதே மிகச் சிரமமாக இருக்கும். அதோடு தொட்டாற்சுருங்கிக்கு மற்றெந்தத் தாவர வகைகளிலும் இல்லாத தனித் தன்மை ஒன்று உண்டு. மனிதர்களின் உறுப்புகளோ, விலங்கினங்களின் உறுப்புகளோ அல்லது மிகச் சிறிய் பொருள்களோ அதன் மீது பட்டால்கூட, விரிந்திருக்கும் அதன் இலைகள் தானாகச் சுருங்கிக்கொள்ளும். அது அப்படிச் சுருங்கிக்கொண்டால், அங்கே ஒரு செடி இருப்பதுபோன்றே தெரியாது. ஏதோ கண்ணுக்குத் தெரியாத சிறிய கயிறு கிடப்பதுபோல் தோன்றும். சிறிது ஓங்கிக் காற்றடித்தால்கூட அதன் இலைகள் மூடிக்கொள்ளும்; தென்றலுக்கும் கூடத்தான்.

தென்னையும் செடியும் நல்ல நண்பர்கள். என்றாலும் தென்னை எப்பொழுதும் செடியைக் கேலி செய்தவண்ணமே இருக்கும்.

"சின்னஞ்சிறு செடியாகிய நீ மிகக் கோழை. சாதாரண தென்றல் பட்டால்கூட, உன் இலைகள் மூடிக்கொள்ளுகின்றன. கதிரவனின் வெயில்பட்டாலும் அதே கதிதான். மனிதர்களுடைய கரம் பட்டுவிட்டாலோ கேட்க வேண்டியதேயில்லை. நீ எப்பொழுதும் பயந்து பயந்து சாகிறாய். நான் அப்படியில்லை. எதைக் கண்டும் நான் அஞ்சுவதேயில்லை. மனிதர்கள் கொடிய அரிவாளால் என்னை வெட்டிக் காயப்படுத்தினால்கூட, நான் அதற்காகப் பிறருக்கு வணங்குவதில்லை. கோழையான நீ, சிக்கிரத்திலேயே அழிந்துவிடுவாய் என்பது நிச்சயம்"-என்று எப்பொழுதும் தென்னை சொல்லிக்கொண்டிருக்கும்.

தொட்டாற்சுருங்கி இதற்குப் பதில் சொல்வதேயில்லை. அமைதியாகவே இருந்து, தனக்குள் சமாதானமடைந்துவிடும்.

திடீரென்று ஒரு நாள் பெரும் புயல் அடித்தது. எங்கும் ஒரே பேரொலி. மரக்கிளைகள் ஒடிந்துவிழும் சப்தம் காதைத் துளைத்தது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஒரே செம்மண் புழுதிப் படலம். தொட்டாற்சுருங்கி, தன்னை மிகவும் சுருக்கித் தரையோடு தரையாகத் தன்னை இணைத்துக்கொண்டது. வெளியில் என்ன நடக்கிறது என்பதைக் காணவே அதற்குப் பயம்! கண்ணை இறுக மூடிப் படுத்துக்கொண்டது.

அரை மணி நேரம் விடாது அடித்த புயல் நின்றது. எங்கும் அமைதி நிலவியது. தொட்டாற்சுருங்கி மெதுவாகக் கண்ணை விழித்துத் திரும்பிப் பார்த்தது. முதலில் அதன் கண்கள் தென்னையைத்தான் நோக்கின. அங்கே-

திடீரென்று அடித்த புயலில் அந்தத் தென்னை வேரோடு சாய்ந்து விட்டிருந்தது.

தென்றலுக்கும் வணங்கும் தொட்டாற்சுருங்கி, புயலிலும் அழியவில்லை!

—ப. புகழேந்தி

வெண்பாப் போட்டி

5. போட்டாளே வேலையற்றுப் போய்.

அந்திப் பொழுதினிலே அல்லிக் குளத்தருகில்
புந்திகெடச் சோரம் புரிந்ததன்பின்-நொந்துமனம்
வாட்டி வதைக்க வழிசெய்யான் மேல்வழக்குப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—மு. கோவிந்தராசன், கூத்தங்குடி.

காட்டாட்சி [illegible] தரும் காங்கிரசின் திட்டங்களை
ஏட்டளவில் தானகண்டேனே என்றிட்டேன்-கேட்டாளா
நீட்டிவிட்ட காசுக்கு நீள்கரத்தால் ஓட்டுதனைப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—விசுவம், திருவேங்கடபுரம், சென்னை-24.

இன்றிரவு [illegible] இன்புறுவோம் மயக்கப்போ[illegible]
என்னைத் தடுப்பா[illegible] அவரென்றேன்-அன்னையிது
கேட்டாள் வெகுண்டாள் கிழ்மேலா[illegible] [illegible]
போட்டாளே வேலையற்றுப் போய்.

—நாவுக்கரசன், காரைக்குடி.

அல்லலைப் போக்க அறியாத மந்திரிக்கே
இல்லாள் இருந்தாலும் என்ன பயன்?-நல்லறிவை
ஊட்டா தவருக்கு உப்பிட்ட நல்லுணவைப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—சி. பி. சாமி, சுவால்பேட்டை.

இன்தமிழ்க் கன்னி இதயத்தில் வீற்றிருக்க
வன்மொழி இந்திதன் பண்பிலா-மின்னுடலைக்
காட்டிக் கருத்தறியாக் கள்ளி வலைக்கண்ணைப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—இரா. பெருமாள், சென்னை-5.

ஓட்டுமிகப் பெற்று உலகாளும் உத்தமர்க்குத்
தோட்டாவுங் குண்டுந்தான் தோள்வலியோ-நாட்டினது
கேட்டை யகற்றுத கிழ்மதியா ரைப்பெற்றுப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—அ. பகவதி, கன்னியாகுமரி.

சாதிவெறியும் [illegible] சாயும் தமிழ்மகவை
வேதியரின் தாள்பணியும் வீணர்களை-மேதினியில்
ஊட்டியே சீராட்டி உன் தமிழ்த் தாய்வளர்த்துப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—மீரா. மன்னன், [illegible]

[illegible] பாங்கும் தன் [illegible]
உய்யு நாளில் ஓர்நன்மை-செய்ய
மூட்டாத மாக்களையும் மாண்புத் தமிழன்னை
போட்டாளே வேலையற்றுப் போய்.

—நெல்லை. தமிழ்க்கோவன், சென்னை-5.

[illegible] தேன் பக்கத்தில் [illegible]
கொஞ்சிட்டாள் முத்தம் கொடுத்திட்டாள்-நெஞ்செல்லாம்
வாட்டமுறும் அவ்விருளில் ஓர்பணிப்பெண் மின்விளக்கைப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—கல்ச்செல்வன், சோழபுரம்.

பெற்றமனம் பித்து பிள்ளை மனம்கல்லு
உற்றமகன் ஊதாரி யானான்-பெற்றவளும்
நாட்டார் நகைக்கஞ்சி நாள்தோறும் வீண்சோறு
போட்டாளே வேலையற்றுப் போய்.

—டாக்டர் எஸ். கந்தசாமி, [illegible]

[illegible] நாயகியை நானிழுத்துக்
கட்டி யணைத்திட்டேன்; கள்ளியவள்-சட்டெனவே
கோட்டானைப்போல் கூவும் குழவிதனை முன்னிழுத்துப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—ஆ. வி. நாதன், சென்னை-24.

திட்டமுடன் இந்தியைத்தான் தேடித் திணித்ததினால்
கெட்டகுடி யேகெட்டும் கேட்பாரில்-வெட்கமின்றி
'மாட்டா'லே மாண்புற்ற மந்திரியைக் குட்டியெனப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—பழனிராதா, கும்பகோணம்.

சட்ட சபையிலண்ணு சாற்றுமொழி தம்மனத்தில்
சுட்டதுபோல் அங்கு சுவைத்திருந்தும்-சட்டென்றே
அத்தைக்கு மீசை முளைத்தாலென் றோர்வார்த்தை
போட்டாளே வேலையற்றுப் போய்.

—ந. பொன்னரசு, வலங்கை.

[illegible] வீணையது மோட்டினிலேதூங்க
ஏட்டளவில் கற்றுள் எழிலுடையாள்-நோட்டமின்றி
பாட்டளவாய் நிற்கும் இந்திக்கே வீண்தாளம்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—ப. நடராசன், திருப்பூர்.

[illegible] காதலியை நான்பிரிந்தேன்; மீள்வதற்குள்
கேள்வி பலநூறு கேட்டுமனம்-தாளாமல்
வாட்டமுடன் அஞ்சல் வடித்தெனக்குப் பேதையவள்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—சுப. சோலாதன், கரந்தை.

கவிகெடுத்த பூம்பொழில்போல் காணுதமிழ் [illegible]
இனிகெடுக்கத் தாளேன் இதனைச்-செவிமடுக்க
மாட்டாரை, இந்தி வெறியரை தண்டதமிழ்த்தாய்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—பா. வேலன், [illegible]

நாட்டைப் பிரிப்பதற்கு நாமளிக்கும் நல்லுரைகள்
கேட்டை யளிக்குமெனக் கூறுகின்றார்-வெட்கமின்றிக்
கோட்டையில் கொலுவிருக்கும் மந்திரியே! உன்னையும்தான்!
போட்டாளே வேலையற்றுப் போய்.

—ச. இராமையன், திருப்பாப்புலியூர்.

நீல மணியிரண்டும் நித்திலமும் துப்பதுவும்
கோலப் பணிகளாய்க் கொண்டிருக்கச்-சீலமிலா
கோட்டமுள்ள பொன்னணியும் கோதையவள் மெய்யதனில்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—கோ. சீனிவாசன், குடந்தை.

[illegible]கத்துக்கு ஆக்கம் காட்டாத காரணத்தால்
மெத்தச் சுருங்குகின்றார் மேதினியில்-நித்தநித்தம்
கொட்டும் பசியால் குழந்தை தனைவிற்றுப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

செ. சீனிவாசன், சலகண்டபுரம்.

பஞ்சகால ஆட்சியிலே வாத்தியார் கூட்டமெலாம்
பஞ்சைகளாய் வாழுவதைப் பாரறியும்-வஞ்சியவள்
வீட்டின் நிலையறிந்தும் வீணாய்ப் பலதிட்டம்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—வாத்தியார்முத்து, [illegible]

பொங்கு மதிபோலும் பூத்த மலர்போலும்
மங்கைத் தமிழாள் மனையிருக்க-பொங்கரவுக்
கோட்டானைக் கொள்ளுவையோ என்தமிழா? உன்னையுந்தான்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—தாமரைச்செல்வன், பெசவாடா